




# உதயன்

பக்கங்கள் - 20 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :29 ஆவணி 31ஆம் நாள் புதன்கிழமை 16 செப்ரெம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051


## நல்லூரில் இருந்த திலீபனின் படம் பொலிஸாரால் அகற்றம்!



யாழ்ப்பாணம், செப்.16
யாழ்ப்பாணம் - நல்லூரில் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் அமைக்கப்பட்டிருந்த உருவப் படம், நினைவேந்தல் பதாகைகள் என்பன பொலிஸாரால் அக

18 ➤

# திலீபனை நினைவுகூரும் அனைவரும் கைதாவர்

### பாதுகாப்பு அமைச்சின் செயலர் கமால் கடும் எச்சரிக்கை



**கொழும்பு, செப்ரெம்பர் 16**
**திலீபனை நினைவு கூர்ந்தால் யாராக இருந்தாலும் அவர்கள் கைது செய்யப்படுவார்கள். நீதிமன்றம் இந்த விடயத்தில் வழங்கிய உத்தரவை நான் வரவேற்கின்றேன். இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.**

18 ➤

## விடுதலைப்புலிகளை அஞ்சலிப்பது ஆபத்து

*தமிழர்களை எச்சரிக்கின்றது சஜித் அணி*

கொழும்பு, செப்.16
தமிழீழ விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என்று உலகமே ஏற்றுக்கொண்டுள்ளது. பயங்கரவாதிகளை நினைவுகூர்ந்து

18 ➤

## மன்னிப்புக்கோர விக்கி மறுப்பு; வழக்கு விசாரணை ஆரம்பம்!!!

கொழும்பு, செப்.16
வழக்கை மீளப் பெற்றுக்கொள்வதற்கு முன்னாள் மாகாண அமைச்சர் டெனீஸ்வரன் தரப்புச் சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ முன்வைத்த மூன்று நிபந்தனைகளை

18 ➤



## தடையை மீறி திலீபனை அஞ்சலித்த சிவாஜி கைது

யாழ்ப்பாணம், செப்.16
தியாகி திலீபனை நினைவேந்தியமைக்காக தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான எம்.கே.

18 ➤

## பயங்கரவாதிகளை விட மோசமானவர் சிவாஜி!

*அவரைத் திருத்தவே முடியாது என்கிறது அரசு*

கொழும்பு, செப். 16
இந்த நாட்டில் பயங்கரவாதிகளை நினைவுகூர சட்டத்தில் இடமில்லை. பயங்கரவாதியான திலீபனையும் நினைவுகூர முடியாது. நீதிமன்றமும் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுக்குத் தடையுத்தரவு வழங்கியுள்ளது. இவற்றை மீறிச் செயற்பட்டதால் பொலிஸாரால் சிவாஜிலிங்கம் கைதுசெய்யப்பட்

18 ➤

## ஆதிலிங்கேஸ்வரரின் திருவிழாவுக்கும் தடை!

வவுனியா, செப்.16
வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்துக்கு செல்லவோ, அங்கு பூசைகள் செய்யவோ முடியாது என்று நிர்வாகத்தினருக்கு நெடுங்கேணி பொலிஸார் அறிவித்துள்ளனர். வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய வருடாந்த

18 ➤

## நினைவேந்தலுக்கு தடை; மீள் மனுவும் நிராகரிப்பு!

யாழ்ப்பாணம், செப்.16
தியாகி திலீபனை நினைவுகூர்வது தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பை நினைவுகூரும் செயல் எனக் கூறி, விதிக்கப்பட்ட தடையை விலக்கி, தியாகி திலீபனின் நினைவேந்தலுக்கு அனுமதிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மீள் மனுவை யாழ் நீதிவான் ஏ.எஸ்.பீற்றர்

15 ➤

## கத்திக்குத்தால் ஒருவர் இறப்பு!

யாழ்ப்பாணம், செப்.16
கத்திக்குத்துக்கு இலக்கான நபர் மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று பருத்தித்துறை

18 ➤

**விவசாய உற்பத்திகளுக்கு**

## 10 வீத கழிவு அறிவிட்டால் பொலிஸிடம் ஒப்படையுங்கள்

*அமைச்சர் மஹிந்தானந்த தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், செப்.16
விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு இன்றிலிருந்து 10 சதவீதக் கழிவு அறவிடப்படும் நடைமுறை உடனடியாக நிறுத்தப்

18 ➤

## அனைவரையும் இணைத்து அடக்குமுறைக்கு எதிர்ப்பு!

நேற்று நடந்த கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், செப்.16
தியாகி திலீபனின் நினைவேந்தலுக்குத் தடை விதிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதைக் கண்டித்தும்

15 ➤


செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுனின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.66,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது
தங்கக் கடன் 011 200 88 88 செலான் வங்கி
Brand Finance Rating "A+" Fitch Rating: "A" (lka)

Mobitel Master unlimited
உங்களுக்கு விருப்பமான UNLIMITED பக்கேஜைத் தெரிவு செய்யுங்கள்
UNLIMITED CALLS மாதாந்தம் ரூபா. 1500/- மட்டுமே
UNLIMITED CALLS & DATA
அழையுங்கள் 1717
Sri Lanka Telecom Mobitel

## வன்னியசிங்கத்தின் நினைவு நிகழ்வு நாளை



யாழ்ப்பாணம், செப்.16
அமரர் கு.வன்னியசிங்கத்தின் நினைவு தின நிகழ்வுகள் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளன.

காலை 9.30 மணியளவில் நீர்வேலி சந்தியில் உள்ள வாலைக்குலைச் சங்கத்துக்கு முன்பாக உள்ள அமரர் வன்னியசிங்கத்தின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்படும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கோப்பாய் தொகுதிக் கிளைத் தலைவர் அ.பரம்சோதி தலைமையில் பி.ப. 4.30 மணிக்கு, யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைச் செயலகத்தில் நினைவு தின நிகழ்வுகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(ஏ)

# ‘மாகாணசபை வேண்டாம்’ நிறைவேறியது தீர்மானம்!

### ஏனைய சபைகளிலும் நிறைவேற்ற உத்தேசம்

கொழும்பு, செப்.16

**மாகாணசபைத் தேர்தல் முறைமை இல்லாதொழிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தும் தீர்மானம் ஒன்று வலல்லாவிட பிரதேச சபையில் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.**

களுத்துறை மாவட்டத்துக்கு உட்பட்ட வலல்லாவிட பிரதேச சபையின் மாதாந்த அமர்வு, அதன் தவிசாளர் தலைமையில் நேற்றுக் காலை நடைபெற்றது.

அதில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் நாலக தரங்க சமரசிங்க என்பவரால் ‘மாகாணசபைத் தேர்தல் முறைமையை ஒழிக்ககோரும்’ பிரேரணை சபையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

25 உறுப்பினர்களைக்கொண்ட இந்தப் பிரதேச சபையின் நேற்றைய அமர்வில் 23 உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தனர். வாக்கெடுப்பின்போது ஒரு உறுப்பினர் சபையில் இருந்து வெளியேறினார் எனவும், ஒருவர் வாக்களிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்ட நிலையில், ஏனைய 21உறுப்பினர்களும் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்து அதைத் தீர்மானமாக நிறைவேற்றியுள்ளனர்.

2018 இல் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 14 உறுப்பினர்களுடன் இந்தப் பிரதேச சபையின் ஆட்சி அதிகாரத்தை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கைப்பற்றியது. ஐக்கிய தேசியக்கட்சியின் உறுப்பினர்கள் அறுவர், சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் மூவர், ஜே.வி.பியின் உறுப்பினர் ஒருவர், ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் உறுப்பினர் ஒருவர் ஆகியோர் சபையில் அங்கம் வகிக்கின்றனர். அதேவேளை, ஏனைய சபைகளிலும் இவ்வாறான தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு சரத் வீரசேகரவுக்கு சார்பான உறுப்பினர்கள் உத்தேசித்துள்ளனர் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.(எ44)

# அளுத்கமகேயின் ‘கலக்கல்’!



- நல்லாட்சி அரசின் காலத்தில் அமைச்சர்கள் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு வருகை தரும் போது சோதனைகள் எதுவும் இருப்பதில்லை. ஆனால் ராஜபக்ஷ அரசின் அமைச்சரான மஹிந்தானந்த அளுத்கமகே நேற்று வருகை தந்த நிகழ்வில், மோப்ப நாய் சகிதம் மண்டபம் சோதனையிடப்பட்டது. அத்துடன் நிகழ்வில் பங்கேற்க வந்தவர்கள் சோதனையின் பின்னர் அனுமதிக்கப்பட்டனர்.
- கச்சேரியை ஏற்கனவே கட்சி அலுவலகமாக்கிய அரசியல் தரப்பினர் நேற்றைய தினமும் அடாவடியில் ஈடுபட்டனர். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நிகழ்வு இடம் பெற ஏற்பாடாகியிருந்தது. பிரதான மேடையில் வைப்பதற்குரிய பெயர் பலகைகளை, மாவட்டச் செயலகப் பணியாளரான ஒருவர் (தற்போது மாவட்டத்தின் ஒருங்கிணைப்பு இணைத் தலைவரின் அலுவலகத்தில் பணியாற்றுபவர்) ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர் அலுவலகத்துக்கு எடுத்துச் சென்றுள்ளார். இதனால் மாவட்டச் செயலர் கோபமுற்றுள்ளார். அலைபேசியில் கடுமையாக உரிய தரப்புக்களுடன் கதைத்த பின்னர், பிரதான மேடைக்குப் பெயர்ப் பலகைகள் வந்து சேர்ந்துள்ளன.
- இதற்கிடையில் அமைச்சர் மஹிந்தானவின் ஆசனத்துக்குப் பக்கத்தில் அமர்வதற்கான அடிபாடும் நேற்று இடம்பெற்றது. இறுதியில் மாவட்டச் செயலகம் ஒழுங்கமைத்தவாறுதான் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டன. இதேவேளை, யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் ‘அதகளம்’ பண்ணிய அரசியல்வாதிக்கு நேற்றுக் காற்றுப் பிடுங்கப்பட்டது.
- மாவட்டச் செயலகத்துக்கு அமைச்சர்கள் குழாம் மேள தாளத்துடன் அழைத்து வரப்பட்டனர். நிகழ்வில் கலந்துகொள்ள வந்திருந்த விவசாய சங்கங்கள், சம்மேளனங்களின் பிரதிநிதிகளை மாலையுடன் வருமாறு அதிகாரிகள் பணித்திருந்தனர். சுமார் 100 மாலைகள் வரையில் கொண்டு வரப்பட்டிருந்தன. அமைச்சர்களுக்கு, இராஜாங்க அமைச்சர்களுக்கு மாலைகள் போடப்பட்டன. ஆனாலும் அவர்கள் அதைப் போட்டதுமே கழற்றி உதவியாளர்களிடம் கொடுத்து விட்டனர். இதைவிடச் சோகம், மாலைகள் கொண்டு வந்த அரைவாசிப்பேருக்கு மேற்பட்டோர் மாலைகளைப் போடாமல் கொண்டு சென்றனர்.
- அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தமிழில் தனது உரையை ஆற்றினார். நிகழ்வில் தமிழ் அதிகாரிகள் ஆங்கிலத்தில் பதிலளிக்க கதைக்கமுற்பட்டபோது, தமிழில்கதையுங்கள் என்று பணித்தார். ஆனால், கலந்துரையாடல் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது தமிழில் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளை அமைச்சருக்குப்பின்னால் இருந்து சிங்களத்தில் மொழி பெயர்த்தே சொல்லிக் கொண்டிருந்தார்கள்.
- அதிகாரிகள் இங்கு சொல்லி விட்டுச் செல்ல முடியாது. இங்கு சொன்னதைச் செய்ய வேண்டும் என்று அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார்.
- விவசாயிகளின் பிரச்சினையைக் கேட்பதற்கான கூட்டம் என்று ஒழுங்குபடுத்திவிட்டு ஆரம்பத்தில் 30 நிமிடங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விழுங்கிக் கொண்டார். கொழும்பில் அமைச்சு அலுவலகத்திலும், அமைச்சரவையிலும் விவசாய அமைச்சர் அளுத்கமகவைச் சந்திக்கும் வாய்ப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு உண்டு. ஆனாலும் இங்கு ‘சீன்’காட்டுவதற்காகவோஎன்னவோ விவசாயிகள் பிரச்சினை தொடர்பான மனுவைக் கையளித்து விட்டு அதிலுள்ள ஒவ்வொரு விடயங்களையும் கூறினார்.
- சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் முன்னைய அரசை கரித்துக் கொட்டுவதற்கும் அமைச்சர் மஹிந்தானந்த தவறவில்லை.
- வழமைபோன்று யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் ஓரவஞ்சனையை நேற்றும் காண்பித்தது. யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், சி.வி.விக்னேஸ்வரன், பொ.கஜேந்திரகுமார் ஆகியோருக்கு நேற்றைய நிகழ்வுக்கான அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டிருக்கவில்லை. ஆனால் வடக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநரும், சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தற்போதைய நியமன நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேன் ராகவனுக்கு மேடையில் ஆசனம் வழங்கப்பட்டிருந்தது. மக்கள் பிரதிநிதிகளை அழைக்காமல் இப்படி அரசியல் கட்சிக்கு பக்கச் சார்பாக நடப்பது தான் மாவட்டச் செயலரின் திறமையான நிர்வாகமா?
- ராஜபக்ஷக்களின் முன்னைய ஆட்சிக் காலத்தில் ஒரு வழக்கம் இருந்தது. தங்களின் கூட்டங்களுக்கு பேருந்துகளை விட்டு மக்களை ஏற்றி வருவதும் அவர்களுக்கு நிகழ்வு முடிவில் ‘சோற்றுப் பார்சல்’ வழங்குவதும் வழக்கம். நல்லாட்சி அரசின் காலத்தில் இதுவும் ஓய்ந்திருந்தது. ஆனால் நேற்றைய தினம் அமைச்சர் மஹிந்தானந்தவின் நிகழ்வுக்கு, விவசாய சங்கப் பிரதிநிதிகள் பேருந்துகளில் ஏற்றி வரப்பட்டதுடன் நிகழ்வு முடிவில் அவர்களுக்கும் ‘சோற்றுப் பார்சல்’ வழங்கப்பட்டது. அதேபோன்று வரிப் பணத்தை வீண் விரயம் செய்வதில் ராஜபக்ஷ அரசுக்கு நிகர் வேறெதுவும் இல்லை. நேற்றைய நிகழ்விலும் அரசைப் பிரபல்யப்படுத்தும் கையேடுகள் விநியோகிக்கப்பட்டன. (ஒ.5)

31 ஆம் நாள் நினைவஞ்சலி

யாழ். கோப்பாய் அப்பிழனைப் பிறப்பிடமாகவும்
மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும், கனடா
Toronto வை வசிப்பிடமாகவும் கொண்ட
அமரர் மார்க்கண்டு
சுப்பிரமணியம்
(ஓய்வுபெற்ற மக்கள் வங்கி உத்தியோகத்தர்)

குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த
எங்கள் அன்பான அப்பாவே!
ஒரு கூட்டுக் கிளிகளாக நாம் சந்தோஷமாக
சிறகடித்து பறந்தோம்!
திடீரென உங்களை அந்தக் காலனவன்
விதி வடிவில் வந்து கவர்ந்து சென்றவிட்டான்
எத்தனை யுகங்கள் சென்றாலும் மறக்கமுடியுமா?
உமது வதனமதை! என்றும் உங்கள்
நினைவுகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
அன்னாரின் பிரிவுத் துயர் பகிர்ந்த அனைத்து உள்ளங்களுக்கும்
நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.



தோற்றம் 17.04.1929
மறைவு 17.08.2020

குடும்பத்தினர் - கனடா
+141 632 12300

# விவசாய உற்பத்திகளை கொள்வனவு செய்வோம்

## இரண்டு வாரங்களில் திட்டம் ஆரம்பம் என்கிறார் அமைச்சர்

**யாழ்ப்பாணம், செப். 16**

**விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களை நாமே நேரடியாக நியாய விலையில் கொள்வனவு செய்வோம். தெற்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டம் இரண்டு வாரங்களில் இங்கும் நடைமுறைப்படுத் தப்படும் என்று விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.**

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

'விவசாயிகளிடமிருந்து 650 ரூபா பெறுமதியான விவசாய உற்பத்திகளை நாம் கொள்வனவு செய்து மக்களுக்கு 350 ரூபாவுக்கு விற்பனை செய்கின்றோம். இந்தத் திட்டத்தின் ஊடாக விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கின்றது. இந்தத் திட்டத்தை இரண்டு வாரங்களுக்குள் வடக்கிலும் ஆரம்பிப்போம்' - என்றார். (ஒ.5)

மேய்ச்சல் தரவைக்கு

## வனவளத் திணைக்களத்திடமிருந்து காணிகள் பெற்றுத் தரப்படும்

யாழ்ப்பாணம், செப். 16

யாழ்ப்பாண மாவட்டத்துக்குத் தேவையான மேய்ச்சல் தரவைக்கு உரிய காணிகள் வனவளத் திணைக்களத்திடமிருந்து நிபந்தனை அடிப்படையில் பெற்றுத் தரப்படும். இவ்வாறு விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

கட்டாக்காலிகளின் பிரச்சினை தொடர்பில் ஆராயப்பட்டபோதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

'யாழ்ப்பாணத்தில் போதியளவு மேய்ச்சல் தரவைகள் இல்லை. அவற்றை உருவாக்குவதற்குரிய திட்டங்கள் எங்களிடம் இருக்கின்றன. அதற்குரிய காணியை வனவளத் திணைக்களத்தினர் வழங்குகின்றார்கள் இல்லை' என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் குறிப்பிட்டார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர், வனவளத் திணைக்களத்தினரை விவசாய நடவடிக்கைகளுக்கு காணிகளை வழங்கவேண்டும் என்று ஜனாதிபதி பணித்திருக்கின்றார். அந்தக் காணிகளில் எந்த அபிவிருத்தி வேலைகளையும் முன்னெடுக்க முடியாது. நிபந்தனை அடிப்படையில் அதனைப் பெற்றுத்தருவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும், என்றார்.

**முட்கம்பி வேலி**

வயல்களில் விதை விதைக்க ஆரம்பித்த பின்னரும், அறுவடைக் காலங்களிலும் கட்டாக்காலி மாடுகளால் அவை அழிவடைகின்றமை தொடர்பில் விவசாயிகள் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், விவசாய உற்பத்திகள் விலங்குகளால் குறிப்பாக யானைகளால் அழிவடைவது தொடர்பில் ஆராய்வதற்கே அமைச்சு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. எனவே விலங்குகளால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் ஆராயப்படும். விவசாயிகள் தமது காணிகளை முட்கம்பி வேலிகளை அமைத்துப் பாதுகாக்க முடியும். அதற்குரிய முட்கம்பிகளை அரை மானிய விலையில் வழங்கமுடியும். எல்லாவற்றையும் அரசால் இலவசமாக வழங்கமுடியாது. அதனை அரை விலையில் பெற்று வேலிகளை அமைத்துப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் - என்றார்.

**பொலிஸ் உதவி**

கட்டாக்காலி மாடுகளை கமக்கார அமைப்புக்கள் தமது விவசாயிகள் ஊடாக அல்லது பிடிகாரர்கள் ஊடாகப் பிடித்து அதனை ஏலம் விட முடியும். அவ்வாறு செய்வதற்கு யாராவது இடையூறு விளைவித்தால் அல்லது மிரட்டினால் அவர்களைப் பொலிஸிடம் பிடித்து ஒப்படையுங்கள். பொலிஸார் இதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இதேபோன்று வல்லிபுர ஆழ்வார் கோயிலை அண்மித்த பகுதிகளில் வயற்காணிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டது. இதற்குப் பதிலளித்த அமைச்சர், இத்தகைய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு பொலிஸாருக்குரியது. பொலிஸார், சிறப்பு அதிரடிப் படையினருடன் இணைந்து இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ஒ.5)

## அரச வேலை வாய்ப்புகளுக்கு இங்குள்ளோரையே நியமிப்போம்

*தெற்கிலிருந்து கூட்டி வரமாட்டோம் என்கிறார் மஹிந்தானந்த அளுத்கமகே*

யாழ்ப்பாணம், செப். 16

வடக்கில் விவசாய திணைக்களங்களில் காணப்படும் வெற்றிடங்களுக்கு இங்குள்ளவர்களையே நியமிப்போம். நல்லாட்சி அரசின் காலத்தில் தென்பகுதியிலிருந்து கூட்டி வந்து இங்குள்ள வெற்றிடங்களை நிரப்பியதைப் போல் நாம் நிரப்ப மாட்டோம் என்று விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் பல்வேறு வெற்றிடங்கள் காணப்படுகின்றன. விவசாயப் போதனாசிரியர்கள் வெற்றிடம் உள்ளிட்ட சுமார் ஆயிரத்து 400 வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டியுள்ளன. அவற்றுக்கு தென்பகுதியிலிருந்து ஆள்களைக் கொண்டு வரமாட்டோம். இங்குள்ளவர்களையே நியமிப்போம்.

விவசாயப் போதனாசிரியர்கள் உள்ளிட்ட முக்கியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படும்போது விவசாயிகளின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்படும் - என்றார். (ஒ.5)



நேற்றைய நிகழ்வில் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ், இராஜாங்க அமைச்சர்களான சசீந்திர ராஜபக்ஷ, டி.பி.ஹேரத், மொகான் டீ சில்வா ஆகியோரும் நாடாளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், சுரேன் ராகவன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## உ.கிழங்கு, மிளகாய், வெங்காயம் 3 ஆண்டுகளில் இறக்குமதிக்குத் தடை

யாழ்ப்பாணம், செப். 16

உருளைக் கிழங்கு, மிளகாய், வெங்காயம் என்பன மூன்று ஆண்டுகளின் பின்னர் இறக்குமதி செய்வதற்கு முற்றாகத் தடை விதிக்கப்படும். இங்குள்ள விவசாயி களே அதனை உற்பத்தி செய்யவேண்டும். இவ்வாறு அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

விதை உருளைக்கிழங்கை மானிய விலையில் வழங்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இந்தக் கோரிக்கைக்குப் பதிலளித்த அமைச்சர் மஹிந்தானந்த, மானிய விலையில் விதை உருளைக் கிழங்கு வழங்கப்படும் என்று கூறினார்.

அத்துடன், உருளைக் கிழங்கு, மிளகாய், வெங்காயம் என்பன அடுத்த மூன்று ஆண்டுகளின் பின்னர் இறக்குமதி செய்வது தடை செய்யப்படும். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அதனைத் தெரிவித்துள்ளார். இங்குள்ள விவசாயிகள் அதனைப் பயிரிட வேண்டும் என்று குறிப்பிட்டார். (ஒ.5)

## வடக்கு விவசாயிகளுக்கு சிறிமாவோவின் காலம்

யாழ்ப்பாணம், செப். 16

வடக்கு மாகாணம் குறிப்பாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விவசாயிகள் 1970 ஆம் - 1980 ஆம் ஆண்டுகளில் கோடீஸ்வரர்களாக இருந்தார்கள். அந்தக் காலத்தில் இங்கு உற்பத்திசெய்யப்படும் பொருள்களே தென்னிலங்கையில் விற்பனை செய்யப்பட்டன. போரால் அழிவடைந்த அந்த நிலைமையை மீண்டும் உருவாக்குவோம். இவ்வாறு விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

சுபீட்சத்தின் நோக்கில் விவசாய மறுமலர்ச்சி என்ற தலைப்பில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் கலந்துரையாடல் இடம்பெற்றது. அதன் ஆரம்பத்தில் உரையாற்றிய விவசாய அமைச்சர் மஹிந்தானந்த, நான் எனது அமைச்சுப் பொறுப்பேற்ற பின்னர் எனக்கு வாக்களித்த கண்டிக்கு செல்லாமல் இங்கே வந்திருக்கின்றேன். நாட்டின் பொருளாதாரத்தில் வடக்கு மக்களே மிகப் பெரிய ஆதரவு. கிழக்கு, மிளகாய், வெங்காயம் என்பன இங்கிருந்து உற்பத்தி செய்யப்பட்டே கொழும்புக்கு வந்தன. இங்குள்ள விவசாயிகள் பணம் உழைத்தார்கள். போரால் அவை எல்லாம் அழிவடைந்து போயின. அந்த யுகத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும், -என்றார். (ஒ.5)

# விவசாயக் கடன் ரூ.1500 மில். இன்னமும் செலுத்தப்படவில்லை

யாழ்ப்பாணம், செப். 16

யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாயிகள் பெற்றுக்கொண்ட விவசாயக் கடன் தொடர்பில், திறைசேரி டனும் இலங்கை வங்கியின் தலைவருடனும் பேச்சு நடத்துவேன் என விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த காலங்களில் இலங்கை வங்கியிடமிருந்து ஆயிரத்து 500 மில்லியன் ரூபா விவசாயக் கடன் பெறப்பட்டுள்ளது. ஆனால் மோசமான காலநிலை என்று கூறி விவசாயிகள் அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை. பெற்றுக்கொண்ட முதலையாவது செலுத்துமாறு வங்கி கூறியபோதும் விவசாயிகள் அதனைச் செலுத்தவில்லை. இந்த நிலையில் கடனைத் தள்ளுபடி செய்வது தொடர்பில் என்னால் எந்த வாக்குறுதியும் அளிக்க முடியாது. இது தொடர்பில் திறைசேரி மற்றும் இலங்கை வங்கித் தலைவர் ஆகியோருடன் கலந்துரையாடுகின்றேன் - என்று அமைச்சர் கூறினார். (ஒ.5)

# மாகாணசபை முறைமை 'அவுட்' டில்லிக்கு விளக்கமளிக்க ஏற்பாடு

## சிங்கள தீப ஜாதிக பெரமுன யோசனை முன்வைப்பு

**கொழும்பு, 16**

**'மாகாணசபை முறைமையை நீக்குவதற்கான நியாயமான காரணங்களை இராஜதந்திர மட்டத்தில் இந்திய அரசுக்கு இலங்கை தெளிவுபடுத்த வேண்டும். அத்துடன், எமது அமைப்பும் இது தொடர்பில் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் ஊடாக அந்நாட்டு மத்திய அரசுக்கு மனுவொன்றைக் கையளிக்கவுள்ளது' என்று சிங்கள தீப ஜாதிக பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் ஜயந்த லியகனே தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது என பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டதாலேயே இந்தியாவின் தலையீட்டுடன் இலங்கையில் மாகாணசபை முறைமை உருவாக்கப்பட்டது. ஆரம்பத்தில் சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி ஆகியன இம்முறையை ஏற்றுக்கொள்ளவில்லை.

முதலாவது மாகாணசபைத் தேர்தலில் சுதந்திரக்கட்சி போட்டியிடவும் இல்லை. எனினும், தற்போது அக்கட்சி உறுப்பினர்களின் நிலைப்பாடு மாறியுள்ளது. ஆனாலும் நாம் மாறவில்லை. மாகாண சபைகள் ஊழல்மிக்க சபைகளாக மாறியுள்ளன. அரசியல்வாதிகள் நாடாளுமன்றம் வருவதற்கான ஒத்திகை சபையாகவும் இருக்கின்றது. சபைகளை நிர்வகிப்பதற்கு பெருமளவு நிதி செலவிடப்படுகின்றது.

உறுப்பினர்கள் வெளிநாடு சென்று சுகபோகம் அனுபவிக்கின்றனர். மாகாண சபைகளுக்கு செலவிடப்பட்ட நிதி இருந்திருந்தால் வீடில்லாத பலருக்கு இந்நேரம் வீடுகளை நிர்மாணித்துக் கொடுத்திருக்கலாம்.

கடந்த இரு வருடங்களாக மாகாண சபைகள் இயங்கவில்லை. இதனால் நாட்டுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. 87க்கு முன்னரும் மாகாணசபைகள் இல்லாமல்தான் சிறப்பாக நிர்வாகம் நடைபெற்றது. மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு வடக்கு, கிழக்கில் இருந்துகூட குரல்கள் எழுப்பப்படவில்லை.

தமிழ் மக்களுக்கு மொழிப்பிரச்சினை இருக்கின்றது என கூறப்பட்டது. தமிழ் மொழியும் அரச கரும மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ்வாறு தமிழர்களுக்கு இருந்த பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிட்டன. அவர்களுக்கு இங்கு அநீதி இழைக்கப்படவில்லை. எனவே, திணிக்கப்பட்ட மாகாணசபை முறைமையை கட்டாயம் புதிய அரசமைப்பின் ஊடாக நீக்கவேண்டும். இந்தியாவில் இருந்து அழுத்தங்கள் வரலாம் என எண்ணிக்கொண்டிருப்பதைவிட, மாகாணசபை முறைமையின் குறைப்பாடுகளை அந்த நாட்டுக்கு இராஜதந்திர மட்டத்தில் அரசாங்கம் சுட்டிக்காட்ட வேண்டும், அப்போது இருந்த நிலை வேறு, தற்போதைய நிலை வேறு என்பதையும் தர்க்க ரீதியாக விபரிக்க வேண்டும்.

இது தொடர்பில் எமது அமைப்பும் இந்தியத் தூதரகத்திடம் மனு கையளித்து, அந்நாட்டு அரசுக்குத் தெளிவுபடுத்தவுள்ளது.

9 மாகாண சபைகளை மூன்றாக்குவது என்பதெல்லாம் தேவையற்ற விடயம், எனவே முழுமையாக நீக்கப்பட வேண்டும்.' என்றார்.' (ம-44)



# கடற்படைக்கு புதிய தலைமை அதிகாரி

கொழும்பு, செப்.16

இலங்கை கடற்படையின் தலைமை அதிகாரியாக ரியர் அட்மிரல் கபில சமரவீர நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது எனவும், கடற்படை தளபதி வைஸ் அத்மிரல் நிஷாந்த உளுகேதென்னவினால் இன்று அதற்கான கடிதம் ஒப்படைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (வ-இ)



# உங்கள் கட்சியினது வரலாறை மறந்தீரா?

## ஈ.பி.டி.பி உறுப்பினருக்கு எதிராக வவுனியாவில் போராட்டம்

வவுனியா, செப். 16

ஈ.பி.டி.பி கட்சியின் வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான திலீபனுக்கு எதிராக வவுனியா ஆச்சிபுரம் மக்களால் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவருமான கு.திலீபன் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், ஆச்சிபுரம் கிராமம் போதைப்பொருள் கிராமம் என்று தெரிவித்துள்ளார். இதைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுகின்றது என்று மக்கள் தெரிவித்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஆச்சிபுரம் கிராமத்தினைச் சேர்ந்த பெண்கள், இளைஞர்கள், வயோதிபர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர். ஏழை எங்களை இழிவாக்காதீர்கள், மக்கள் பிரதிநிதியே மன்னிப்பு கேள், உங்கள் கட்சியின் பழைய வரலாறு மறந்தீர்களா? போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஆச்சிபுரம் கிராம அபிவிருத்தி சங்க கட்டடத்திற்கு முன்பாக சுமார் ஒரு மணிநேரம் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. (ம-110)

# திலீபனின் தூபிக்கு அருகில் துப்புரவு பணிகளுக்கு தடை

யாழ்ப்பாணம், செப். 16

தியாகதீபம் திலீபன் நினைவேந்தல் நாளினை முன்னிட்டு சூழலியல் மேம்பாட்டு அமையத்தினரால் நேற்றுக் காலை நல்லூரில் அமைந்துள்ள திலீபன் நினைவுத்தூபியை அண்மித்த பகுதியில் துப்புரவுப்பணி முன்னெடுக்கப்பட்டது. எனினும் பொலிஸார் அதற்கும் தடைபோட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பகுதியில் துப்புரவுப் பணியை முன்னெடுக்க வேண்டாம் என பொலிஸார் தடை விதித்ததுடன் பிறிதொரு நாளில் பணியினை முன்னெடுக்குமாறும் நினைவுத்தூபியை அண்மித்த பகுதியில் பொலிஸாரே சுத்தம் செய்யும் பணியை மேற்கொள்வர் என்றும் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது என்று தெரியவருகின்றது. இந்தப் பகுதியில் செய்தி சேகரிப்பு பணியில் ஈடுபட்ட செய்தியாளர்கள் இனம் தெரியாத நபர்களால் ஒளிப்படம் எடுக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-இ)



# 20 திருத்தம் தொடர்பில் அறிக்கை மஹிந்தவிடம்


கொழும்பு, செப். 16

20ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக ஆராய்ந்த குழு, அதன் அறிக்கையை பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் நேற்று கையளித்துள்ளது.

20ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக ஆராய்வதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்சவினால் அண்மையில் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. இந்தக்குழு 20ஆவது அரசமைப்புத் திருத்தம் நாட்டிற்கு ஏற்புடையதா என்பதனை ஆராய்ந்து, அது தொடர்பான அறிக்கையை தற்போது பிரதமரிடம் கையளித்துள்ளது. (ம-இ)

# திலீபனின் தூபியை சீரமைக்க வேண்டாம்

## ஆவரங்காலில் 8 பேர் போராட்டம்



யாழ்ப்பாணம், செப். 16

தமிழ்த் தேசிய மக்கள் இளைஞர் பேரவை அமைப்பாளர் மணிவண்ணன், ஆவரங்கால் பகுதியில் திலீபனின் நினைவுத் தூபி இருந்த இடத்தில் மீளவும் புதிதாக நினைவுத் தூபி அமைப்பதற்கு எடுத்த முயற்சிக்கு அந்தப் பகுதி இளைஞர்கள் சிலர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இந்த எதிர்ப்பு நடவடிக்கை நேற்று மாலை இடம்பெற்றது. ஏற்கனவே இந்த இடத்தில் மீளவும் நினைவுத் தூபியினை அமைக்க எடுத்த முயற்சியின்போது அந்தப் பகுதியினை சேர்ந்த இளைஞர் ஒருவர் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தார். இதையடுத்தே மேற்படி தூபியை சீரமைக்க வேண்டாம் என்று வலியுறுத்தி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ம-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அஞ்சலிப்பது எம் உரிமை

திலீபனின் நினைவேந்தலுக்கு மீண்டும் இரும்புத்திரை போட்டுள்ளது இலங்கையின் நீதித்துறை. இதனால் பசித்தீயில் குதித்து, மக்களுக்காகப் போராடி தன் இன்னுயிரை ஈந்த மறவனை பொதுவெளியில் தமிழ் மக்கள் நினைவேந்துவதை அரசு கச்சிதமாகத் தடுத்துள்ளது. இந்தத் தடை தொடர்பில் மேன்முறையீடுகள் செய்யப்பட்டாலும் அவையும் இப்போதைய அரசியல் சூழமையில் நிராகரிக்கப்படுவதற்கான சாத்தியங்களே நிரம்ப இருக்கின்றன. இந்த நிலையில் திலீபனை நினைவேந்துவதோடு அஞ்சலிப்பதற்கான உரிமையைக் கோரும் வகையில் சகல அரசியல் கட்சிகளும், பொது அமைப்புக்களும் ஒன்றுபட வேண்டிய தருணம் இது.

தொட்டதற்கெல்லாம் கொரோனாவையும், நீதிமன்றத் தடை உத்தரவுகளையும் காரணம் காட்டி எங்களுடைய சாதாரண அடிப்படை உரிமைகளைக்கூட நசுக்கும் வேலைகளில் இலங்கை அரசு இறங்கியுள்ளது.

2009இல் போர் மௌனிக்கப்பட்ட பின்னரும்கூட, கடந்த 11 வருடங்களாக திலீபனின் நினைவேந்தல் நடைபெற்றுத்தான் வந்தது. இதன்போது ஒரு சிறு அசம்பாவிதம்கூட நிகழ்ந்ததில்லை. எந்த வன்முறையும் உருப்பெற்றதில்லை. மக்கள் சொத்துக்கள் சேதமாக்கப்பட்டதில்லை. அன்றைக்கு மக்கள் செய்வதெல்லாம் திலீபனின் நினைவிடங்களில் பூச்சொரிந்து - தீபமேற்றி - கண்ணீர்மல்கி - கசிந்துருகுவது மட்டுமே. இப்படி உளமார அமைதியான வகையில் நிகழ்ந்துவந்த நினைவேந்தலை இம்முறை இலங்கையில் தடைசெய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினரை நினைவுகூருவது சட்டவிரோதம் என்றுகூறி நீதிமன்றம் சென்று தடையுத்தரவு வாங்கியுள்ளது ராஜபக் ஷ அரசு.

ஏற்கனவே ராஜபக்ஷக்களின் இரண்டாவது யுகம் தமிழர்களுக்கு இருண்ட யுகமாகத்தான் இருக்கும் என்பது ஊகிக்கப்பட்டே இருந்தது. ஆனாலும், இம்மியளவுகூட ஜனநாயக இடைவெளிக்கு அனுமதிக்காமல் கண்ணீர்விடும் உரிமையைக்கூட மறுதலித்து தாம் நினைத்தபடிதான் தமிழர்கள் வாழ வேண்டும் என்ற பேரினவாத நினைப்பின் வெளிப்பாடே இம்முறை திலீபனின் நினைவேந்தலுக்கு விதிக்கப்பட்ட தடையாகும்.

குட்டக்குட்டக் குனிபவனும் மடையன் குட்டு வாங்குபவனும் மடையன் என்று சொல்வார்கள். முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் தொடங்கிய தடை திலீபனில் வந்து நிற்கின்றது. அகிம்சை ரீதியாகப் போராடிய ஓர் ஆன்மாவை அஞ்சலிப்பது கூடத் தவறென்றால் அதற்கு எதிராக நம்முடைய எதிர்ப்பையும் காட்டவேண்டிய தருணம் இதுவே. இல்லாவிடில் தடைகளின் பட்டியல் அனுமனின் வால்போல இன்னும் நீளத் தொடங்கிவிடும். இத்தகைய சூழலில் மறுக்கப்பட்ட நீதியின் கண்கள் திறக்கக்கோரி, சகல பொது அமைப்புக்களும், அரசியல் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும். இதன் மூலமே தமிழர்களுடைய ஒற்றுமையையும், அஞ்சலிப்பதற்கான உரிமையையும் அரசுக்கு உணர்த்த முடியும். வீதிகளில் இறங்கி மட்டும்தான் அஞ்சலிக்க வேண்டும் என்பது இல்லை. வீடுகளில் இருந்தவாறும் அமைதியான முறையில் தியாக தீபத்தை நினைவேந்தலாம். ஆனாலும் எமது உரிமையை அவ்வளவு இலகுவில் விட்டுக் கொடுக்கவும் முடியாது. திலீபனுக்கான அஞ்சலி என்பது குடத்தில் இட்ட விளக்காக இல்லாமல், மலை மேல் தீபமாக ஒளி பரப்ப வேண்டும். அதுவே எமக்காக பசித்தீயில் எரிந்துபோன பார்த்தீபனுக்கு நாம் செய்யும் அஞ்சலியாக அமையும்.

# சுகாதார ஆலோசனைகளை தொடர்ந்தும் பின்பற்றுங்கள்

## சுகாதார அமைச்சர் வேண்டுகோள்



**கொழும்பு,செப்.16**

**பொதுமக்கள் தொடர்ந்தும் சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றுவதன் ஊடாகவே, கொரோனா சவாலில் இருந்து முழுமையாக வெற்றியடைய முடியும் என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.**

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நாட்டுக்குள் கொரோனாத் தொற்று இல்லை. 100 நாள்களுக்கும் மேலாக சமூகத்தொற்று இல்லாமல் நாம் வைரஸைக் கட்டுப்படுத்தியுள்ளோம்.

இந்த நிலைமையை நாம் தொடர்ந்தும் பேண வேண்டும். இதற்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியமாகிறது. இதற்காக தொடர்ந்தும் பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறோம்.

மக்கள் இதனை உணர்ந்து, உரிய சுகாதார நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் பின்பற்ற வேண்டும்.

சுகாதார ஆலோசனைகளை மக்கள் முற்றாகப் பின்பற்றினால் தான் இந்தச் சவாலில் இருந்து எம்மால் வெற்றியடைய முடியும்" - என்றார். (க-இ)

# முட்டை விலைக் குறைப்பு; இன்னமும் தீர்மானமில்லை

கொழும்பு,செப்.16

முட்டை உற்பத்தியாளர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கையொப்பம் இடுவதற்கு முன்னர், மீண்டும் பேச்சில் ஈடுபடுவதற்கு அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

முட்டை விலை 22 ரூபாவாக அதிகரித்த நிலையில், இரு தரப்பினருக்கு இடையில் நேற்று ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவிருந்தது.

பிரதமருடன் கடந்த வாரம் இடம்பெற்ற கலந்துரையாடலில் இதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டது.

அதற்கமைய பேக்கரி உரிமையாளர்களுக்கு 16 ரூபா 50 சதத்துக்கு முட்டையைப் பெற்றுக்கொடுக்க முட்டை உற்பத்தியாளர்கள் விரும்பம் தெரிவித்திருந்தனர்.

எவ்வாறாயினும், முட்டையின் விலை 15 ரூபா வரை குறைவடைந்துள்ள நிலையில், அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது தொடர்பில் மீண்டும் பேச்சு அவசியம் என்று பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார். (க-இ)

# கொரோனா காலத்திலும் சிறந்த செயற்றிட்டங்கள்

## உலக நாடுகளின் தலைவர்களும் பாராட்டு

கொழும்பு,செப்.16

கொவிட்-19 தாக்கத்துக்கு மத்தியிலும் சிறந்த செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்திய நாடுகளில் இலங்கையும் முன்னிலையில் உள்ளது. உலக நாடுகளின் தலைவர்களும் இதற்குப் பாராட்டு தெரிவித்துள்ளனர். நாட்டின் பொருளாதார சவால்களும் இதேபோன்று வெற்றி கொள்ளப்படும்.

இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன சேவையில் நேற்று இடம்பெற்ற நிகழ்ச்சியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தெளிவான முறையான செயற்றிட்டத்தின் கீழ், நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் மூலம் மக்களுக்கு மத்தியில் அரசு மீதான நம்பிக்கை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் வங்கித்துறை வலுப்படுத்தப்படுவதோடு, தொழில் முயற்சியாளர்களையும் பாதுகாப்பது அவசியமாகும் என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். (க-இ)

# ஆற்றுகைப்படுத்தல் நிலையம் அடம்பனில்

மன்னார்,செப்.16

மன்னார் அடம்பனின் அமைக்கப்பட்ட ஆற்றுகைப்படுத்தல் நிலையம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை வைபவ ரீதியாக திறக்கப்பட்டது.



மன்னார் மாவட்டச் செயலாளர் சீ.ஏ. மோகன்றாஸ் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

கிராமிய வீடமைப்பு நிர்மாணத்துறை இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத் தொகுதியைத் திறந்து வைத்தார்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் மற்றும் மன்னார் மாவட்ட பிரதேச செயலாளர்கள் , வீடமைப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் மன்னார் தேசிய வீடமைப்பு அதிகாரசபை பணிப்பாளர், திட்டமிடல் பணிப்பாளர், மாந்தை மேற்கு பிரதேச செயலக ஊழியர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

போதைப்பொருள் பாவனை காரணமாக மனதளவில் பாதிக்கப்பட்டவர்களுக்குப் புனர்வாழ்வளிக்கும் நோக்குடன், அவர்களுக்கான ஆலோசனைகள் மற்றும் மருத்துவ உதவிகள் போன்றவற்றை வழங்க இந்த நிலையம் அமைக்கப்பட்டுள்ளது இதே வேளை 60 இலட்சம் செலவில் இக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-56,213)

யாழ்ப்பாணம்

## போதனா மருத்துவமனை குறைபாடுகள் ஆராய்வு

யாழ்ப்பாணம்,செப்.16
யாழ்.போதனா மருத்துவமனையில் காணப்படும் ஆளணி மற்றும் பௌதீக வளப் பற்றாக்குறை தொடர்பான பிரச்சினைகள் ஆராயப்பட்டன.
மருத்துவமனைப் பணிப்பாளர் தலைமையிலான பிரதிநிதிகள், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து குறைபாடுகளை எடுத்துக் கூறினர்.
மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள், ஊழியர்களின் பற்றாக்குறை, மருத்துவமனையில் நிலவும் குறைந்த தளவான வசதிகள் உள்ளிட்ட பிரச்சினைகள் மருத்துவர்களால் எடுத்துக் கூறப்பட்டன. (க)

### தமிழ் மக்களின் பிரதிநிதிகள்

# ஒன்றிணையாவிட்டால் சிங்களவருக்கே பலம்


### சாணக்கியன் எம்.பி.தெரிவிப்பு



மட்டக்களப்பு,செப்.16
தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இல்லை என்றால் சிங்களவர்களுக்கு அது பலமாகிவிடும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.
பெரிய கல்லாறு மக்களால் நடாத்தப்பட்ட வரவேற்பு நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அங்குமிங்கும் இருக்கின்றமையால் பலமடைவது சிங்களவர்கள் தான்.
தமிழர்களாகிய நாம் பலவீனமாகத்தான் இருக்கின்றோம். தமிழ் மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். பின்னர் தமிழ் பேசும் மக்கள் ஒன்றிணைய வேண்டும். அப்போது தான் சிறுபான்மையினராகிய தமிழ் பேசும் மக்கள் பலத்துடன் அரசுக்குச் சவால் விடுக்கும் அளவுக்கு மாறலாம். நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தாலும் கூட, மக்களுக்குத் தேவையான அனைத்து விடயங்களையும், மக்களுக்காக அரசுடன் பேசிச் செய்ய வேண்டும் - என்றார். (க-இ)

## மின் இணைப்புக்கு போலிப் படிவங்கள்



கிளிநொச்சி,செப்.16
கிளிநொச்சி மாவட்டத்தில் மின் இணைப்புக் கிடைக்கப்பெறாத மக்களுக்கு, மின்சாரம் பெற்றுத் தரப்படும் என போலியான விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.
இது தொடர்பில் இலங்கை மின்சார சபையின் கிளிநொச்சி அலுவலகத்திடம் தொடர்புகொண்டு கேட்ட போது;
மின் இணைப்பு கிடைக்கப்பெறாத மக்கள், புதிதாக மின்சார இணைப்பை பெறுவதாயின், இலங்கை மின்சார சபையிடமே விண்ணப்பப் படிவத்தைப் பெற வேண்டும்.
அதனை உரிய முறைப்படி பூர்த்தி செய்து ஒப்படைக்க வேண்டும். இது தவிர கட்சிகள், தனிநபர்கள் வழங்கும் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. நாடு முழுவதும் இதுவரை காலமும் கடைப்பிடிக்கப்பட்டு வந்த நடைமுறைகளே பின்பற்றப்படுகின்றன.
மின் இணைப்பு கிடைக்கப்பெறாதவர்கள் மின்சார சபை அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.
அதேவேளை அரசியல் கட்சி ஒன்றின் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர், கட்சியின் பெயரில் விண்ணப்பப்படிவம் ஒன்றைத் தயாரித்து மின் இணைப்பு கிடைக்காத மக்களுக்கு விநியோகித்துள்ளார். (க-214)

## நலன்புரி நிலைய மக்களுடன் இராஜாங்க அமைச்சர் சந்திப்பு

யாழ்ப்பாணம்,செப்.16
கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டடப்பொருள் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார்.
அவர் உடுவில் சுன்னாகம் தெற்கு சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையத்துக்கு நேரடியாகச் சென்று, அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடினார்.
தங்களுடைய சொந்தக் காணிகளில் சென்று வாழ்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருமாறு, இராஜாங்க அமைச்சரிடம் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.
கோரிக்கை தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி, விரைவில் நல்லதொரு முடிவு பெற்றுத்தரப்படும் என்று இராஜாங்க அமைச்சர் உறுதியளித்தார்.



அவருடன் யாழ்.மாவட்டச் செயலர் க.மகேசன், மேலதிக மாவட்டச் செயலர் (காணி) எஸ்.முரளிதரன் ஆகியோரும் சென்றிருந்தனர்.
அதேவேளை யாழ்ப்பாணம் நகரில் கட்டுமானங்கள் நடைபெற்று முடிந்துள்ள கலாசார நிலையத்தைப் பார்வையிட்ட அமைச்சர் மேற்கொள்ள வேண்டிய இறுதி வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். (க-20)


## ஆலயத்துக்கு இலத்திரனியல் கடிகாரம்

கொடிகாமம்,செப்.16
கொடிகாமம் இராமாவில் முருகன் ஆலயத்தில் ஒரு லட்சத்து 5 ஆயிரம் ரூபா பெறுமதியில் இலத்திரனியல் கடிகாரம் பொருத்தப்பட்டது.
இதற்கான நிதியை இராமாவில் பகுதியைச் சேர்ந்த புலம் பெயர்ந்து பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் தேவராசா தர்சன், ஆலய திருப்பணிச் சபையிடம் வழங்கியிருந்தார். (ஐ-159)

# நெடுந்தீவுப் பெண் கொலை: சந்தேகநபர்கள் அடையாளம்

மன்னார்,செப்.16
நெடுந்தீவிலிருந்து மன்னாருக்கு உறவினர்களால் அழைத்து வரப்பட்டு, கொலை செய்யப்பட்ட பெண்ணின் கொலை வழக்கு நேற்று முன்தினம் இடம்பெற்றது.
இதன் போது அடையாள அணிவகுப்பில் சந்தேகநபர்களை 5 சாட்சியாளர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.
நெடுந்தீவைச் சேர்ந்த றொறிக்கா ஜீயின் (வயது -21) கொலை வழக்கின் அடையாள அணிவகுப்பு, நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை, மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் இம்மானுவேல் கயஸ் பல்டானோ முன்னிலையில் இடம்பெற்றது.
இதன்போது சந்தேகநபர்களான இரு பெண்களை அடையாளம் காட்டுவதற்காக முதலாவது அணி வகுப்பு காலை 9.30 மணிக்கு இடம்பெற்றது.
இரண்டு சந்தேகநபர்கள் உட்பட 14 பெண்கள் நிறுத்தப்பட்ட அணி வகுப்பில், சந்தேகநபர்களை மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு முச்சக்கரவண்டியில் அழைத்துச் சென்ற முதலாவது சாட்சியாக அழைக்கப்பட்ட முச்சக்கர வண்டிச் சாரதி, இரு சந்தேகநபர்களையும் அடையாளம் காட்டினார்.
மன்னார் பஸ் நிலையத்தில் நின்ற பயணி ஒருவர் சாட்சியாக அடையாளம் காட்ட அழைக்கப்பட்டார். அவரும் இரு சந்தேக நபர்களான இரு பெண்களையும் அடையாளம் காட்டினார்.
அதனைத் தொடர்ந்து மூன்றாவது சாட்சியாக மன்னார் பஸ் நிலைய நேரக் கண்காணிப்பாளர் அழைக்கப்பட்டார். அவர் இரு சந்தேக நபர்களையும் அடையாளம் காட்டவில்லை.
பின்னர் வழக்கின் சந்தேக நபரான இறந்தவரின் தாய் மாமனாரை அடையாளம் காணுவதற்காக, அடையாள அணி வகுப்பில் நிறுத்தப்பட்டார். இதில் சாட்சிகளாக அழைக்கப்பட்ட முச்சக்கர வண்டிச் சாரதி, பஸ் நிலையத்தில் நின்ற பயணி, பஸ் நேரக் கண்காணிப்பாளர், பஸ் நிலையத்தில் கொட்டகை கடை முதலாளி, மதுக் கடையில் இவரைக் கண்டதாகத் தெரிவித்த ஒருவர் உட்பட ஐந்து பேரும் தனித்தனியாக அடையாளம் காட்டுவதற்கு அழைக்கப்பட்டனர்.
முச்சக்கரவண்டிச் சாரதி தவிர்ந்த ஏனைய நான்கு பேரும் சந்தேகநபரை அடையாளம் காட்டினர்.
கடந்த மாதம் 13 ஆம் திகதி மன்னார் உப்பளப் பகுதியில் பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது. மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் மரண விசாரணை நடைபெற்றது.
இறந்தவரின் சடலம் அடையாளம் காட்டப்படாத நிலையில் பத்து நாள்களாக, மன்னார் பொது மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது.
இந்த நிலையில் மன்னார் பொலிஸாரின் தீவிர செயற்பாட்டால், நெடுந்தீவைச் சேர்ந்த இறந்த பெண்ணின் இரண்டு உறவுப் பெண்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கடந்த 23 ஆம் திகதி மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.
அதனைத் தொடர்ந்து தேடப்பட்டு வந்த மூன்றாவது சந்தேகநபரான இறந்தவரின் தாய் மாமனாரும் கைதுசெய்யப்பட்டார். அவர் கடந்த 25 ஆம் திகதி மன்னார் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.
சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்ட நிலையில், உறவினர்கள் இறந்தவரை அடையாளம் காட்டி சடலத்தைப் பொறுப்பேற்றனர். மன்னார் பொது சேமக்காலையில் சடலம் நல்லடக்கம் செய்யப்பட்டது.
வழக்கு விசாரணையில் சந்தேகநபர்களை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, பதில் நீதிவான் இ.கயஸ் பல்டானோ கட்டளை பிறப்பித்தார். (க-60)

## முள்ளிவாய்க்காலில் வெடிபொருள்கள்



முல்லைத்தீவு, செப். 16
முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் போரின்போது புதைக்கப்பட்ட வெடிபொருள்கள் சில நேற்று இனங் காணப்பட்டுள்ளன.
அந்தப் பகுதியில் காணியின் உரிமையாளர் நிலத்தைத் தோண்டும்போது இந்த வெடிபொருள்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. சம்பவ இடத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. அத்துடன், நீதிமன்ற அனுமதியுடன் அகழ்வு மற்றும் தேடல் நடவடிக்கைகள் இன்று முன்னெடுக்கப்படவுள்ளன. (ம-19)



# மந்துவில் படுகொலை: நினைவேந்தல் நேற்று

யாழ்ப்பாணம், செப். 16
**மந்துவில் பகுதியில் 1999ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி நடைபெற்ற விமானத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட 24 பொதுமக்களின் நினைவேந்தல் நிகழ்வு நேற்றுக் காலை 9.35 மணிக்கு மந்துவில் சந்தியில் நடைபெற்றது.**

தாயக உறவுகள் நினைவேந்தல் அமைப்பின் இணைப்பாளர் ச.ரூபன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பொதுச்சுடரை உயிர் நீத்த செ.ஆறுமுகம், க.யோகராசா ஆகியோரின் உறவினரான யோ.சாந்தராணி ஏற்றிவைத்தார். நினைவுரைகளை சமூக செயற்பாட்டாளர் த.யோகேஸ்வரன் நிகழ்த்தினார். புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உறுப்பினர்களான இ.சத்தியசீலன், திருமதி நிசாந்தினி மற்றும் முன்னாள் அதிபர் க.சிவலிங்கம் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-213)

## கேரள கஞ்சாவுடன் இருவர் கைது

கொழும்பு, செப்.16
பல்லவெல பகுதியில் 30 இலட்சம் பெறுமதியான கேரள கஞ்சாவுடன் இருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று மேல் மாகாண குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது. இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் பல்லவெல மிஹிது புரய மற்றும் மிதெல்லவல பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும், இராணுவத்தில் முன்னர் சேவையாற்றிய சிப்பாய்கள் எனவும் தெரியவருகின்றது.
மேல்மாகாண கம்பஹா குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை அடுத்து பல்லவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்லேஹேவ பகுதியில் முன்னெடுக்கப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின்போதே ஒன்றரைக் கிலோ கேரள கஞ்சாவுடன் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
இவர்களிடம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் மூலமே, பல்லவெல மிஹிதுபுர பகுதியைச் சேர்ந்த முன்னாள் இராணுவச்சிப்பாயின் வீட்டிலிருந்து பொதிகளில் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கேரள கஞ்சா மீட்கப்பட்டது என புலனாய்வுப் பிரிவினர் மேலும் தெரிவித்தனர். (ற-இ)

## பண மோசடி: மூவர் கைது

கொழும்பு, செப்.16
உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கை அலுவலகத்துடன் இணைக்கப்பட்ட வைத்தியராக தன்னை அடையாளம் காட்டி, பல்வேறு நபர்களிடமும் பண மோசடியில் ஈடுபட்ட பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
இந்த சம்பவத்திற்கு உதவிய குறித்த பெண்ணின் கணவரும் தெஹிவளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். சம்பவத்தில் கைதுசெய்யப்பட்ட பெண் பிலியந்தலாவ பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்.
இதேவேளை பொலிஸ் அதிகாரியாக தன்னைக் காண்பித்து பல நபர்களிடமிருந்து 86 ஆயிரம் ரூபா பணம் வசூலித்த குற்றச்சாட்டில் ஒருவர் கல்கிஸ்ஸ பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதான நபர் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என ஆரம்ப கட்ட விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

### ஐ.நாவுக்கான இலங்கையின்

## வதிவிடப் பிரதிநிதியாகிறார் முன்னாள் பிரதம நீதியரசர்

கொழும்பு, செப். 16
இலங்கையின் முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், ஐ.நாவுக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதியாக நியமிக்கப்படவுள்ளார் என இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.
விரைவில் அவருக்கான நியமனத்தை அரச உயர்பீடம் வழங்கும் எனவும் தெரியவருகின்றது.
மஹிந்த ஆட்சியின்போது சட்டமா அதிபராக செயற்பட்ட மொஹான் பீரிஸ், 2013இல் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டார். பிரதம நீதியரசராக பதவி வகித்த ஷிராணி பண்டாரநாயக்க குற்றப்பிரேரணை ஊடாக பதவிநீக்கம் செய்யப்பட்ட பின்னரே, இவருக்கு பிரதம நீதியரசர் பதவி வழங்கப்பட்டது. 2015இல் ஆட்சிமாற்றம் ஏற்படும்வரை மொஹான் பீரிஸ் பதவியில் நீடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-44)



### சுருக்குவலைப் பயன்பாடு:

## தடைசெய்யக் கோரி மீனவர் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, செப்.16
கடல் பிராந்தியங்களில் சட்டவிரோதமான முறையில் சுருக்கு வலை பயன்படுத்துவதைத் தடை செய்யக்கோரி களுதாவளைப் பகுதி மீனவர்கள் களுதாவளை கடற்கரையில் வைத்து நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
மட்டக்களப்பு மாவட்டத்தின் களுதாவளை, தேத்தாத்தீவு, களுவாஞ்சிக்குடி, செட்டிபாளையம், உள்ளிட்ட பிரதேசங்களில் சிலர் சுருக்கு வலை பாவித்து மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். இதனால் இவ்வருடம் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை கடலில் தமக்கு எதுவித மீன்களும் பிடிபடவில்லை. இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திலெடுத்து சுருக்குவலை பயன்படுத்துபவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் தெரிவித்தனர். இது தொடர்பில், களுதாவளை மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் செ. இராமலிங்கம் தெரிவித்துள்ளதாவது:
செட்டிபாளையம், தேத்தாத்தீவு, களுவாஞ்சிகுடி, களுதாவளை, உள்ளிட்ட கடற் பிராந்தியங்களில், 20 இற்கு மேடற்பட்ட படகுகளில வருபவர்கள், சுருக்குவலை களைப் பயன்படுத்தி நெத்தலி, கீரி, பாரை, உள்ளிட்ட அனைத்தையும் அள்ளிச் செல்கின்றனர். இதனால் நாளாந்தம் கரை வலை மீன்பிடியில் ஈடுபடும் நாம் வாழ முடியாதுள்ளது. இதற்கு அரசாங்கம் தகுந்த நடவடிக்கையை மேற்கொண்டு தீர்வு தரவேண்டும் எனத் தெரிவித்தார். (வ-46)

# தேங்காயின் விலை திடீர் அதிகரிப்பு

### மேலும் அதிகரிக்கலாம் என்கிறது தெங்கு உற்பத்தியாளர் சங்கம்

கொழும்பு, செப்.16
நாட்டில் தேங்காயின் விலை மிகப் பெருமளவில் அதிகரித்துள்ளது.
அதிகரித்துள்ள இத் தேங்காய் விலை எதிர்வரும் நவம்பரில் 100 ரூபா வரை மேலும் அதிகரிக்கக் கூடும் என தெங்கு உற்பத்தியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.
தற்போது சந்தையில் தேங்காய் ஒன்று 70 - 85 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.



தெங்குச் செய்கை மூலம் மாதாந்தம் 250 மில்லியன் தேங்காய்கள் கிடைக்கின்ற போதிலும், அதில் 150 மில்லியன் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகின்றது.
எனினும் கடந்த காலங்களில் சீரற்ற காலநிலை காரணமாக தேங்காய் வளர்ச்சியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என தெங்கு உற்பத்தியாளர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (ந-இ)



# இன்றைய நாள்

**மேடம்:** நன்மை கிட்டும் நாள். எதிர்பார்த்த நல்ல செய்தி வரும். பெண்களுக்கு நட்பால் மகிழ்ச்சி வளரும். திறமையானவர்களின் ஒத்துழைப்போடு தொழில் முன்னேற்றம் உண்டு.

**இடபம்:** முயற்சிகள் வெற்றியடையும் நாள். வீடு வாங்க வேண்டும் என்று நினைப்பீர்கள். குடும்பத்தில் ஒருவருக்கு திருமண வாய்ப்பு கைகூடுவதற்கான அறிகுறி தோன்றும்.

**மிதுனம்:** லேசாகப் பதற்றம் கொள்ளும் நாள். அவசரத் தேவைகளுக்காகக் கடன்வாங்க வேண்டி வரும். பணியாளர்கள் திட்டமிட்ட செயல் ஒன்றில் மாற்றங்களைச் செய்து வெல்வீர்கள்.

**கடகம்:** கலைத்துறையினர் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள். பக்குவமாகப் பேசுவதால் செல்வாக்கு உயரும். முயற்சியில் வெற்றி கிடைக்கும் நாள். நண்பர்களின் ஆதரவு உண்டு

**சிம்மம்:** பணியாளர்களின் சிக்கலான விஷயத்துக்கு தீர்வு கண்டு பாராட்டுப் பெறுவீர்கள். பாடுபட்டதற்கு ஏற்ற பலன் கிடைக்கும் நாள். உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும்.

**கன்னி:** நினைத்த காரியம் ஒன்று நிறைவேறும் நாள். புதிய வருமானத்திற்கு வழி ஏற்படும். கலைத்துறையினருக்கு சிறு ஏமாற்றம் இருக்கும். வீட்டை சீரமைக்கும் எண்ணம் ஏற்படும்.

**துலாம்:** பற்றாக்குறை அகலும் நாள். அக்கம் பக்கத்தினருடன் ஏற்பட்ட பகை மாறும். வியாபாரிகள் தக்க சமயத்தில் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள். தடைப்பட்ட விஷயத்தை முடிப்பீர்கள்.

**விருச்சிகம்:** அலுவலகத்தில் எதிர்பாலினத்தவரால் இருந்து வந்த பிரச்சினை அகலும். வீட்டில் உற்சாகமான சூழ்நிலை உருவாகும். மனதில் அமைதி அதிகரிக்கும் நாள்.

**தனுசு:** அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள். பணியாளர்கள் தைரியத்தோடு செயல்படுவீர்கள். தேவையற்ற விஷயங்களுக்காக மன உளைச்சல் கொள்வீர்கள்.

**மகரம்:** இளைஞர்கள் எதிர்பாலினத்தினரிடம் அதிக நெருக்கம் காட்ட வேண்டாம். கலைத்துறையினர் பெரிய மனிதர்களைப் பகைத்துக்கொள்ள வேண்டாம்.

**கும்பம்:** சிறு வெற்றிகளை கொண்டாடும் நாள். நிலுவைத் தொகைகளை சாமர்த்தியமாகப் பேசி வசூலிப்பீர்கள். வரவுகள் சிறப்பாக இருக்கும்.

**மீனம்:** மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள். பிள்ளைகள் பற்றிய முயற்சி வெற்றி பெறும். வாகனங்களைப் பழுது பார்க்கச் செலவு செய்வீர்கள். எதிர்பாராத செய்தியினால் மனநிறைவு அடைவீர்கள்.



# ஐ.தே.க. தலைவராக தொடர்ந்தும் ரணில்

கொழும்பு, செப்.16

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்க 2021ஆம் ஆண்டு ஜனவரி வரைக்கும் தொடர்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் ஜனவரியில் நியமிக்கப்படவுள்ள கட்சியின் புதிய தலைவர் தொடர்பில் கட்சி விரைவில் கூடித் தீர்மானம் எடுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தின்போது இந்த முடிவுகள் எடுக்கப்பட்டன. முன்னதாக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான ருவான் விஜேவர்த்தன மற்றும் ரவி கருணாநாயக்க ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற பிரதித்தலைவருக்கான இரகசிய வாக்கெடுப்பின்போது, ருவான் விஜேவர்த்தன கட்சியின் பிரதித் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். (ரு-இ)

# கண்டி அதிர்வுக்கு விசாரணைக் குழு

கொழும்பு, செப்.16

கண்டியின் பல பிரதேசங்களில் உணரப்பட்ட நில அதிர்வு தொடர்பிலான விசாரணைகளுக்காக மூவர் கொண்ட குழு நியமிக்கப்படவுள்ளது.

புவி சரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்தின் தலைவர் அனுர வல்பொல இதனைத் தெரிவித்துள் ளார்.

குழுவில் பேராதனை மற்றும் மொறட்டுவை பல்கலைக்கழகங்களின் கலாநிதிகள் மற்றும் பேராசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

கண்டியின் குண்டசாலை, பன்வில மற்றும் வத்தேகம உள்ளிட்ட சில பகுதிகளில் அண்மையில் மீண்டும் அதிர்வு பதிவானது. தமது 4 மத்திய நிலையங்களில் அதிர்வுகள் பதிவாகியுள்ளன என புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

(வ-இ)

# கொரோனா பரவும் சாத்தியம் உள்ளது

*வைத்தியர் சுதத் சமரவீர தெரிவிப்பு*

கொழும்பு, செப்.16



வெளிநாடுகளிலிருந்து வருவோரால் சமூகத்தில் கொரோனாத் தொற்று ஏற்படாவிடினும், நாட்டினுள் கொரோனா பரவுவதற்கான சாத்தியம் உள்ளது என விசேட வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

சிலவேளை எம்மால் இனங்காணப்படாத ஒரு கொரோனாத் தொற்றாளர் சமூகத்தில் இருந்தால், அதனூடாக கொரோனா பரவும் வாய்ப்பு உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

# நியூ டைமன்ட் கப்பல் தொடர்பில் கருத்துக்களை சமர்ப்பிக்க உத்தரவு

கொழும்பு, செப்.16

தீ விபத்துக்குள்ளான எம்.டி. நியூ டைமன்ட் கப்பல் தொடர்பான கருத்துக்களைச் சமர்ப்பிக்குமாறு அனைத்து கடல்சார் பங்குதாரர்களுக்கும் சட்டமா அதிபர் திணைக்களம் உத்தரவிட்டுள்ளது. இதனை கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவி தர்ஷனி லஹந்தபுர தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் இடம்பெற்ற கடல்சார் பங்குதாரர்களுக்கு இடையிலான சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இலங்கையின் நீர் நிலைகளில் இதுவரை எண்ணெய்க் கசிவு ஏற்படும் அபாயம் எதுவும் தென்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, சேதமடைந்த எம்டி நியூ டைமன்ட் கப்பல் மட்டக்களப்பில் இருந்து சுமார் 59 கடல் மைல் தொலைவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என கடற்படை ஊடகப் பேச்சாளர் கப்டன் இந்திக டி சில்வா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதன்படி நாளை வியாழன் காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். மாவட்டத்தில்** உடுப்பிட்டி, பொலிகண்டி, வல்லை, தொண்டமனாறு, வல்வெட்டித்துறை, அக்கரை, வளலாய் ஆகிய இடங்களிலும், **வவுனியா மாவட்டத்தில்** நெளுக்குளத்திலிருந்து உளுக்குளம் வரை, வாரிக்குட்டியூர், நித்தியநகர் ஆகிய இடங்களிலும், **மன்னார் மாவட்டத்தில்** கற்கிடந்தகுளம் பிரதேசத்திலும், மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.

## எப்போதும் எம்முள் நீயிருப்பாய்..!

கருவாகி உருவாகி பின்னே
கையிலே மகவாகி
தழுவிய கணத்திலே உன்
தாய் என்ன
நினைத்திருப்பாள்?
என் பிள்ளையும்
நூறாண்டு வாழ
வேண்டுமென்று தானே

இப்போது உனக்கு
ஒரு தாயல்ல
ஓராயிரம் அன்னையர்

சுதந்திரத் தாகத்தோடு
உரிமைப் பசியோடு
மக்களுக்காக நீ மாண்டது
இறந்த காலமாகிவிட்டாலும்

நீ ஏற்றிவைத்த
உணர்வுத் தீபம்
எப்போதும் அணையாமல்
என்றும் நிகழ்காலமாக
எம்முள் வாழ்ந்திருப்பாய்
பார்த்தீபா...!

-நிர்மியா




## அப்போதும் இப்போதும்

இலங்கையில் சுதந்திரப் போராட்ட வரலாற்றில் அதி முக்கிய இடத்தைப் பிடித்து வரலாற்றுச் சாதனைகள் படைத்தவர்கள் வட இலங்கைத் தமிழர்கள். ஆங்கிலேயருடன் அவர்களின் நாட்டுக்கே என்று சொற்சமர் புரிந்து வெற்றி வாகை சூடியவர்களும் யாழ்ப்பாணத் தமிழர்கள் தான். பேச்சுக்க ளில் கலந்து கொண்டு நாடு திரும்பிய சேர் பொன். இராமநாதனைப் பல்லக்கில் தூக்கிக்கொண்டு ஊர்வலம் வந்தவர்கள் அன்றைய சிங்களத் தலைவர்கள். அத்தோடு மட்டும் நின்றுவிடவில்லை. அந்த சிறப்புமிக்க தமிழ்த் தலைவர்களான சேர் பொன். இராமநாதன், சேர் பொன் அருணாசலம் ஆகியோருக்கு அதியுயர் நாடாளுமன்றத்தின் முன்னால் நிலைகளை நிறுவியும் கௌரவித்தனர். அவை இன்றும் கொழும்பு காலிமுகத்திடலில் அமைந்துள்ள பழைய நாடாளுமன்றக் கட்டடத் தின் முன்புறத்தில் கம்பீரமாக காணப்படுகின்றன. இந்த பழைய நாடாளுமன்றக் கட்டடமே தற்பொழுது ஜனாதிபதியின் செயலகமாக இயங்குகின்றது.

நாட்டுக்கும் நமது சமூகத்துக்கும் நற்பணியாற்றியவர்கள் யாராக இருந்தாலும் மத, இன மொழி பேதமின்றி கௌரவிப்பது உயர் பண்பாகவும் அரசியல் நாகரிகமாகவும் ஒருகாலத்தில் இலங்கையில் இருந்தது. அந்த வகையில் மலையக மக்களுக்காக சேவையாற்றிய சௌமியமூர்த்தி தொண்டமானுக்கும் சிலை வைத்து கௌரவிக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று தலைவர்களும் இப்பொழுதும் இப்போதைய ஜனாதிபதி செயலகம் முன்பாக கம்பீரமாக அணி வகுத்து நிற்கின்றனர். ஜனாதிபதி கோத்தாபய உட்பட எவரானாலும் ஜனாதிபதி செயலகத்துக்கு செல்லும் போது இந்த தமிழ்த் தலைவர்களைத் தரிசித்த பின்னரே உள்நுழைய வேண்டிய நிலை. இதனைத் தவிர்க்க முடியாது.

ஆனால் இப்பொழுது தமிழ்த் தலைவர்களின் நிலையோ தலைகீழ்.

இவ்வாறு பிரசித்தி பெற்ற கொழும்பு காலிமுகத்திடலில் முன்னைய நாடாளுமன்றத்துக்கு முன் தந்தை செல்வநாயகம், அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் உட்பட நம் தலைவர்கள் அமைதியான முறையில் சத்தியாக்கிரகம் செய்தபோது குதிரைப் படை கொண்டு அடித்து துன்புறுத்தப்பட்டதோடு சிறையிலும் அடைக்கப்பட்டனர்.

அன்று முதல் இன்று வரை நம் தமிழர்களின் வாழ்க்கை, போராட்டமாகவே அமைந்துள்ளது. நமது அபிலாஷைகளை – வேணவாக்களை சிங்களத் தலை வர்கள் தாம்பாளத்தில் வைத்து தரப்போவதில்லை. அவற்றைப் போராடிப் பெறவேண்டும் என்றாகிவிட்டது.

அன்று ஆரம்பித்த போராட்டம் இன்றும் ஓயவில்லை. சாத்வீகப் போராட்டம், சத்தியாக்கிரகப் போராட்டம், அரசியல் வழிப் போராட்டம், அகிம்சை வழிப் போராட்டம் என எல்லாப் போராட்டங்களையும் கடந்து ஓய்ந்து விட்ட நிலையிலேயே ஆயுதப் போராட்டம் உருவெடுத் தது. ஆனாலும் கூட தமிழ் அரசியல் கட்சிகளுக் கிடையிலான இழுபறிகளும், குழிபறிப்புகளும் இன்றும் கூட தீர்ந்தபாடில்லை.

தமிழர்களின் தேசியத் தலைவர் பிரபாகரனின் வழிகாட்டலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனால் இப்போது கூட்டமைப்பில் உள்ளவர்கள் நடந்துகொள்ளும் விதத்தைப் பார்க்கும் போது, இவர்கள் தலைவர் பிரபாகரனுக்குப் பயந்து ஒன்றுபட்டார்களாக எம்மினத்தின் விடுதலைக்காக உணர்வுபூர்வமாகத்தான் இணைந்தார்களா என்பது விடை கிடைக்காத கேள்வியாகவே இருக்கின்றது.

- ஜிகா

# ஆயிரம் குளங்கள் சீரமைப்பு: அடுத்த வாரம் ஆரம்பம்

கொழும்பு, செப்.16

நாட்டில் உள்ள ஆயிரம் குளங்களை மறுசீரமைக்கும் வேலைத் திட்டம் அடுத்த வாரம் ஆரம்பிக்க உள்ளது என நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் நிஹால் சிறிவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டம் விவசாய உற்பத்திகளை அதிகரிக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்படவுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இத் திட்டத்திற்கு 'நீர்ப்பாசன சுபீட்சம்' எனப் பெயரிடப்பட்டுள்ளதுடன், அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் ஆலோசனையின்படி அமைச்சர்களை உள்ளடக்கிய செயலணி ஒன்று இதற்காக அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

## சுற்றுலா - சுகாதார அமைச்சுக்கள் சந்திப்பு

கொழும்பு, செப்.16

இலங்கையின் சுற்றுலா அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு ஆகியவற்றுக்கிடையே கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இலங்கைக்கு குறைந்தளவான விளையாட்டுத்துறை சுற்றுலாப் பயணிகளை வரவழைப்பது தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

கொரோனாவுக்கு மத்தியில் நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகள் வருவதை படிப்படியாக அதிகரிப்பதன் ஒரு பகுதியாகவே இந்தத் திட்டம் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

இந்தவகையில் கொரோனா காரணமாக எதிர்வரும் நவம்பர் மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள உத்தேச லங்கா பிரீமியர் லீக் போட்டிகளுக்காக (எல்.பி.எல்) சிறிய விளையாட்டு குழுக்கள் நாட்டுக்கு வருவதற்கு அனுமதிவழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது என சுற்றுலா அமைச்சின் செயலாளர் எஸ்.ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

சிறிய விளையாட்டுக் குழுக்கள் நாட்டுக்கு வந்து ஒரே விருந்தகத்தில் தங்க அனுமதிக்கப்படுவதன் மூலம் அந்தக்குழுக்களின் வீரர்களது நகர்வுகளைக் கட்டுப்படுத்த முடியும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



## வவுனியா விபத்து: ஒருவர் படுகாயம்!

வவுனியா,செப்.16

வவுனியா ஈரட்டை நவகம பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். மதவாச்சியிலிருந்து வவுனியா நோக்கி வந்துகொண்டிருந்த பாரவூர்தி எதிரே வந்த லொறியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் பாரவூர்தியின் சாரதி காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பாக ஈரட்டை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ந-110)

## புதையல் அகழ்வு: 11 பேர் கைது

மட்டக்களப்பு, செப்.16

சட்டவிரோதமான முறையில் புதையல் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்ட பதினொரு பேர், கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்சய பெரமுன தெரிவித்தார்.

கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மயிலம்கேணி என்ற வயல் பிரதேசத்தில், புதையல் அகழ்வதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என வாழைச்சேனை விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து, வாழைச்சேனை பொலிஸாரின் உதவியுடன் மேற்கொண்ட விசேட சுற்றி வளைப்பின்போதே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை வாழைச்சேனை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது பதினான்கு நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து புதையல் அகழ்வதற்கு பயன்படுத்திய பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. (ற-150)

## போதைப்பொருள்களுடன் 432 பேர் கைதாகினர்

கொழும்பு, செப்.16

மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது போதைப்பொருள்களுடன் 432 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் காலை 6 மணி தொடக்கம் நேற்று அதிகாலை 5 மணி வரை இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் வழிகாட்டலின் கீழ், இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது. இதன் போது, ஹெரோய்னுடன் 185 பேர் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் குறிப்பிட்டனர். இவர்களிடமிருந்து 99 கிராம் ஹெரோய்னும் கைப்பற்றப்பட்டுள்ளது. (ற-இ)

## ரிஷாட் மீண்டும் ஆஜர்



கொழும்பு, செப்.16

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன் மற்றும் லக்ஷ் மன் கிரியெல்ல ஆகியோர் வாக்குமூலம் வழங்குவ தற்காக ஆஜராகியுள் ளனர். ரிஷாத் பதியு தீன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் கு ழு முன்னிலையில் நேற்றுமுன்தினமும் ஆஜராகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம்,செப்.16
சரசாலை வடக்கு பகுதியில் உள்ள வீடொன்றில் கஞ்சா வைத்திருந்த குடும்பஸ்தர் ஒருவர் சாவகச்சேரி பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.
கைதுசெய்யப்பட்டவரிடம் இருந்து 9 கிராம் 500 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது.
பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து, சந்தேக நபரின் வீடு முற்றுகையிடப்பட்டது. வீட்டிலிருந்த் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார் - என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-25)

# சிறுவர்களுக்கு சூடு வைத்த தம்பதியருக்கு மறியல்

திருகோணமலை,செப்.16
15 மற்றும் 10 வயதுடைய சிறுவர்களுக்கு நெருப்பால் கையில் சூடு வைத்த இருவரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் விசானி தேனவது உத்தரவிட்டார்.
தம்பலகாமம் பகுதியைச் சேர்ந்த 45 மற்றும் 38 வயதுடைய கணவன், மனைவியே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
சிறுவர்களின் தாய் வெளிநாடு சென்றுள்ள நிலையில், தந்தை வேறு திருமணம் முடித்து வாழ்ந்துள்ளார்.
அவரது அக்காவிடம் இரண்டு குழந்தைகள் பராமரிப்பில் இருந்தனர். அங்கு நெருப்பில் கம்பியைக் காய்ச்சி சிறுவர்களுக்கு சூடு வைக்கப்பட்டுள்ளது.
சந்தேகநபர்களைக் கைதுசெய்த பொலிஸார், கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் நேற்று முற்படுத்தினர். அதன்போது நீதிமன்றால் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக் கப்பட்டது.
பாதிக்கப்பட்ட இரண்டு சிறுவர்களும் மருத்துவஅறிக்கைக்காக கந்தளாய் தள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (க-இ)

# மாணவர்களுக்கு செயலமர்வு

கிளிநொச்சி,செப்.16
இந்த வருடம் இடம்பெறவுள்ள புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள, பளைப் பகுதி மாணவர்களுக்கான செயலமர்வு,கடந்த சனிக்கிழமை பளை இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் இடம்பெற்றது.
நா.பூபாலசிங்கம் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்ட நிதி அனுசரணையுடன் செயலமர்வு இடம்பெற்றது.
இதில் பளை பிரதேசத்தின் எட்டு பாடசாலைகளைச் சேர்ந்த 118 மாணவர்கள் கலந்துகொண்டனர்.
வளவாளர்களாக ப.சுதர்சன் சி.பங்கயன் ஆகியோர் கலந்து கொண்டனர்.
தொடர்சியாக சனிக்கிழமைகளில் செயலமர்வுகள் நடத்தப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (க-6)








வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியால் வருடந்தோறும் நடத்தப்படும் மகாகவி பாரதியார் விழா, கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரி ஒட்லி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக தென்னிந்தியத் திருச்சபை யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தின் பேராயர் கலாநிதி டானியல் செல்வரத்தினம் தியாகராஜா கலந்து கொண்டார். (க-50)

# மரக் கடத்தலில் ஈடுபடும் குழுக்களுக்கு எச்சரிக்கை



வவுனியா,செப்.16
இயற்கை வளங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் சட்டவிரோத மரக் கடத்தலை மேற்கொண்டு வரும் குழுவினருக்கு எதிராக, கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தம்மிக்க பிரியந்த தெரிவித்துள்ளார்.

வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கும் வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்களுக்கும் இடையே இடம்பெற்ற சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
இயற்கை அழிவுகளை தெளிவுபடுத்தும் நடவடிக்கை எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது. பொதுமக்களுக்கு இயற்கை தொடர்பான தெளிவை ஏற்படுத்த வேண்டிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். மரங்களை அழிக்கின்றமையால் எமது நாட்டுக்கு ஏற்படும் பேரழிவைப் பொதுமக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.
தமது பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத மரக்கடத்லை முறியடிக்க. பொதுமக்கள் எம்முடன் இணைந்து பணியாற்ற வேண்டும் - என்றார். (க-110)

# தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள்

சாவகச்சேரி,செப்.16
தேசிய நூலக ஆவண வாக்கல் சபையின் ஏற்பாட்டில், இந்த வருடத்துக்கான தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள் ஒக்ரோபர் மாதத்தில் நடைபெறவுள்ளன. அதற்கான ஏற்பாடுகளை பொது நூலகங்கள் முன்னெடுத்துள்ளன.
"நூலொன்றை வாசிப்போம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்" என்னும் தொனிப் பொருளில் இந்த வருடம் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன. (க-9)

# அலைபேசி திருடியவர் அயலவர்களால் கவனிப்பு

சாவகச்சேரி,செப்.16
ஆள்களில்லையென நினைத்து வீட்டுக்குள் நுழைந்து அங்கிருந்த பெறுமதியான அலைபேசியைத் திருடியவரை, அங்கு படித்துக் கொண்டிருந்த சிறுமி கண்டு சத்தமிட்டதால் அயலவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.
தப்பியோட முயன்ற திருடனை அயல்பகுதி மக்கள் பிடித்து முறையான கவனிப்பின் பின்னர், சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை சாவகச்சேரி கிராம்புவில் படையாண்டான் கந்தசுவாமி கோவிலுக்கு அருகில் இடம்பெற்றது.
பெற்றோர் வெளியே சென்ற வேளையில் சிறுமி வீட்டுக்குள் இருந்து படித்துக் கொண்டிருந்தார்.
வீட்டில் ஆள்களில்லையென நினைத்து உள்ளே நுழைந்த திருடன், அங்கிருந்த அலைபேசியை எடுத்துள்ளார். சத்தம் கேட்டு அறைக்குள்ளிருந்து வெளியே வந்த சிறுமி, அலைபேசியை எடுத்துச் செல்வதை அவதானித்து, மற்றைய கதவினூடாக வெளியே வந்து கூக்குரலிட்டுள்ளார். சத்தத்தைக் கேட்டு ஓடி வந்த அயலவர்கள், ஓட முயன்ற திருடனைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (க-9)



# மயான இணைப்பு வீதிக்கு 15 லட்சம் ரூபா ஒதுக்கீடு

கொடிகாமம்,செப்.16
கொடிகாமம் இராமாவில் பிரிவில் கொயிலாமனை மயான இணைப்பு வீதி, 15 லட்சம் ரூபா செலவில் தார் வீதியாகப் புனரமைக்கப்பட்டுள்ளது.
இந்த வீதி நெடுங்காலமாக மணல் வீதியாகக் காணப்பட்டதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.
சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் திருமதி ஞா. திலகராணியின் முயற்சியால், பிரதேச சபை உறுப்பினர்களின் அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் 5 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்திருந்தார்.
அத்துடன் அரசின் சப்ரிகம திட்டத்தில் 10 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு, 125 மீற்றர் தூரம் தார் வீதியாக மாற்றப்பட்டது.
இந்த வீதி பல வருடங்களாக மழை காலங்களில் பல இடங்களில் வெள்ளம் தேங்கி நிற்கும் காரணத் தால், அப்பகுதி மக்கள் வேறு வீதிகள் ஊடாக பயணித்தமை குறிப்பிடத்தக்கது. (க-159)

# மலசலகூடத்துக்கு இரவு நேரத்தில் பூட்டு

## பயணிகள் அசௌகரியம்

யாழ்ப்பாணம்,செப்.16
யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட மத்திய பஸ் நிலையத்தில் அமைந்துள்ள மலசலகூடம், இரவு நேரத்தில் பூட்டப்படுகிறது.
இதனால் தூர இடங்களுக்குச் செல்லும் பயணிகள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.
கொழும்பு, திருகோணமலை,மட்டக்களப்பு, அம்பாறை, மலையகம் போன்ற தூரப் பிரதேசங்களில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் பயணிகள் நள்ளிரவு நேரத்தில் யாழ்ப்பாணத்தை வந்தடைகின்றனர். அவர்கள் இயற்கை உபாதைக்கு உள்ளாகும் போது, எங்கே செல்வது என்று தெரியாத நிலை காணப்படுகின்றது. இது தொடர்பில் யாழ். மாநகரசபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-25)



**தியாகதீபம் திலீபன் நல்லூர் வீதியில் நிகழ்த்திய அகிம்சை வேள்வி பற்றிய நேரடி அனுபவங்கள்**



“நாளை நான் சுயநினைவுடன் இருப்பேனோ என்று தெரியாது. அதனால் இன்று உங்களுடன் பேச வேண்டும் என்று விரும்பினேன். நான் எமது இலட்சியத்தில் உறுதியாக இருக் கின்றேன்.”



# பார்த்தீபனுடன் பன்னிரண்டு நாள்கள்

## இரண்டாம் நாள்

■ மு.வே.யோ.வாஞ்சிநாதன்

1987 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி. இது திலீபனுடன் இரண்டாம் நாள். அன்று அதி காலை 5 மணிக்கே திலீபன் உறக் கத்தைவிட்டு எழுந்து விட்டார். முகம் கழுவி தலை வாரிக்கொண்டார். சிறுநீர் கழித்தார். ஆனால் மலம் இன்னும் போகவில்லை. அவர் முகம் சோகமாகக் காணப்பட்டாலும் அதைக்காட்டிக்கொள்ளாமல் எல் லோருடனும் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தார்.

சகல தினசரிப் பத்திரிகைகளையும் ஒன்று விடாமல் படித்து முடித்தார். பத்து மணியளவிலே பக்கத்து மேடையில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. நிகழ்ச்சி களுக்கு தேவர் தலைமை தாங்கிக்கொண்டிருந்தார். கவிதைகளைப் படிப்பதற்காக இளம் சந்ததியினர் முண்டியடித்து தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டிருந்தனர். நிதர்சனம் ஒளிபரப்பாளர்களின் வீடியோ கமரா நாலா பக்கமும் சுழன்று படம்பிடித் துக் கொண்டிருந்தன.

மேடைகளில் கவிதைகள் முழங்கிக்கொண்டிருந்த போது திலீபன் என் காதுக்குள் குசுகுசுத்தார். “நான் பேசப் போகிறேன் மைக்கை வேண்டி தாங்கோ வாஞ்சி அண்ணை.”

“சாப்பிடாமல் குடிக்காமல் இருக்கிறீங்கள் களைத்து விடுவீர்கள்..” என்று அவரை தடுக்க முயன்றேன்.

” இரண்டு நிமிடம் மட்டும்.. நிப்பாட்டி விடுவன். ப்ளீஸ் மைக்கை வாங்கித்தாங்கோ ” என்று குரல் தள தளக்க கூறினார். அவரைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. கண்கள் குழி விழுந்து, முகம் சோர்ந்து காணப்பட்டாலும் அந்த பசுமையான சிரிப்பு மட்டும் இன்னும் மாறாமல் அப்படியே இருந்தது.

இரண்டு நிமிடத்துக்கு மேல் பேசக்கூடாது என்ற நிபந்தனையுடன் மேடையில் நின்ற தேவரிடம் மைக்கை, பெற்றுக் கொடுத்தேன். திலீபன் பேசப் போவதை தேவர் ஒலிபெருக்கியில் அறிவித்ததும் மக்கள் கூட்டம் மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்தது. திலீ பன் பேசுகிறார். “எனது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய மக்கள் அனைவருக்கும் வணக்கம். நின்று கொண்டு பேச முடியாத நிலையில் இருப்பதால் இருந்து பேசுகிறேன். நாளை நான் சுயநினைவுடன் இருப்பேனோ என்று தெரியாது. அதனால் இன்று உங்களுடன் பேச வேண்டும் என்று விரும்பினேன். நான் எமது இலட்சியத்தில் உறுதியாக இருக்கின் றேன். 650 பேர் வரையில் இன்று வரை மரணித் துள்ளோம். மில்லர் இறுதியாகப்போகும்போது என்னிடம் ஒரு வரி கூறினான். நான் அவனுடன் இறுதி வரை இருந்தேன். “நான் எனது தாய் நாட்டுக் காக உயிர் துறப்பதை எண்ணும்போது மகிழ்ச்சியும், திருப்தியும் அடைகிறேன். மக்கள் விடுதலை அடை யும் காட்சியை என் கண்களால் காண முடியாது என்பதே ஒரே ஏக்கம் ” என்று கூறிவிட்டு வெடி மருந்து நிரப்பிய லொறியை எடுத்துச்சென்றான். இறந்த 650 பேரும் அநேகமாக எனக்கு தெரிந்து தான் மரணித்தார்கள். அதனை நான் மறக்க மாட் டேன். உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிப்ப தற்கு தலைவரின் அனுமதியைக் கேட்டபோது அவர் கூறிய வரிகள் என் நினைவில் உள்ளன.

திலீபா நீ முன்னால் போ..நான் பின்னால் வருகி றேன் என்று அவர் கூறினார். இத்தகைய ஒரு தெளி வான தலைவனை, தனது உயிரை சிறிதும் மதிக் காத தலைவனை நீங்கள் பெற்று இருக்கிறீர்கள். அந்த மாபெரும் வீரனின் தலைமையில் ஒரு மக் கள் புரட்சி இங்கு வெடிக்கட்டும். அது நிச்சயமாக தமிழீழத்தினை தமிழர்களின் அடிப்படை உரிமை களை பெற்றுத்தரும். இதனை வானத்தில் இருந்து இறந்த மற்ற போராளிகளுடன் சேர்ந்திருந்து நானும் பார்த்து மகிழ்வேன்.

நான் மனரீதியாக ஆத்மார்த்தமாக எமது மக்கள் விடுதலை அடைவார்கள் என உணர்கிறேன். மகிழ்ச் சியுடனும் பூரண திருப்தியுடனும் உங்களிடமிருந்து விடைபெறுகிறேன். விடுதலைப்புலிகள் உயிரினும் மேலான சிறுவர்களை, சகோதரிகளை, தாய்மார் களை, தந்தையர்களை நினைக்கிறார்கள். உண் மையான உறுதியான இலட்சியம். அந்த இலட்சியத் தினை எமது தலைவருடன் சேர்ந்து நீங்கள் அடை யுங்கள் எனது இறுதி விருப்பமும் இதுதான்.”

மிகவும் ஆறுதலாக சோர்வுடன் ஆனால் திடமுடன் பேசிய அவரின் பேச்சைக்கேட்டு மக்கள் கண்ணீர் சிந்தினர். அன்றிரவு தலைவர் வந்து திலீபனை பார்த்தார். சோர்வுடன் படுத்திருந்த திலீபனின் தலையை தனது கரங்களால் வருடினார். ஒரு தகப் பனின் அன்பையும் தாயின் பாசத்தையும் ஒன்றாக குழைத்தது போலிருந்தது அந்த வருடல். இரண்டு இமய மலைகளையும் என் கண்கள் விழுங்கிக் கொண்டிருந்தன. இரவு பன்னிரண்டு மணிக்கு திலீ பன் உறங்கத்தொடங்கினார். நானும் அவர் அருகி லேயே படுத்து விட்டேன்.

திலீபனின் வீட்டில் குணபாலன் என்ற சிறுவன் வேலை செய்வதற்காக இருந்தான். அவனது வறுமை நிலையைக் கண்ட திலீபன் தன் கையில் கிடைக்கும் பணத்தை அவனிடம் அடிக்கடி கொடுப் பார். யாழ். இந்துவில் அவர் படிக்கும்போது, வீட் டுக்கு வரும்போதெல்லாம் குணபாலனுக்காக கைநிறைய “டொபி”களுடன் வருவார். குணபால னுக்கு ரீ.வி. பார்க்கும் பழக்கம் இருந்தது. தன் வேலைகளை முடித்துவிட்டு இரவு எட்டு மணிக்குப் பின், பக்கத்து வீட்டுக்குச் சென்று அவன் ரீ.வி. பார்ப்பது வழக்கம். குணபாலனுக்காகத் திலீபன் தன் தந்தையிடம் ஒரு ரீ.வி. வாங்கி வைக்குமாறு பலமுறை கெஞ்சிக் கேட்டார்.

இவரது தொல்லை தாங்கமுடியாமல் இராசையா ஆசிரியர் ஒருநாள் ரீ.வி. யை வாங்கி வந்துவிட்டார். குணபாலனும் அன்றிலிருந்து எதுவித சிரமமு மின்றி ரீ.வி. பார்த்துவரத் தொடங்கினான். யார் மீதும் எளிதில் அன்பு வைப்பதிலும், இரக்கம் காட்டு வதிலும் திலீபனுக்கு நிகர் அவரேதான். அதற்கு இது ஒரு நல்ல உதாரணம். திலீபன் யாழ். இந்துவில் படிக்கும்போது அவரது நெருங்கிய நண்பனாக இருந்தவர்களில் கணேசன் என்பவரும் ஒருவர்: இவர் இப்போது ஒரு டொக்ரராக இருக்கின்றார். ஒரு நாள் திலீபன், கணேசன் மற்றும் சிலர் ஊரெழுவி லுள்ள திலீபனின் வீட்டுக்கு வந்தனர்.

அப்போது யாழ். இந்துவில் பொருட்காட்சி நடைபெற் றுக் கொண்டிருந்தது. திலீபனின் வீட்டிலே சில மாதங்களுக்கு முன் ஒரு நாய் செத்து விட்டதால், அதை ஒரு மரத்தின் கீழ் கிடங்கு வெட்டித் தாட்டிருந் தார்கள்.

திலீபனும் நண்பர்களும் அந்தக் கிடங்கைக் கிண்டி நாயின் எலும்புக் கூட்டை வெளியில் எடுத்துத் துப் புரவு செய்தார்கள். அப்போது ஏற்பட்ட துர்நாற்றம் காரணமாக வீட்டில் இருந்தவர்கள் வெளியே போனாலும், திலீபனும் நண்பர்களும் அதைப் பொருட்படுத்தாமல் தமது வேலையை முடித்துவிட்டு. அந்த எலும்புக்கூட்டை அன்றே எடுத்துச்சென்று பொருட்காட்சியில் வைத்தனர். எதையும் ஆராய்ச்சி செய்து பார்ப்பதில் திலீபனுக்கு மிகுந்த ஆர்வம் உண்டு.

அதனால்தான் இந்த உண்ணாவிரதப் போராட்டத் தில் இறக்க நேரிட்டால் தனது உடலை யாழ். வைத் திய பீடத்துக்கு ஆராய்ச்சிப் படிப்புக்காக அனுப்பி வைக்கும்படி அவர் கூறினார் போலும்?

*- தியாகம் தொடரும்....*

# பயிர்ச்செய்கைக்கு பொருத்தமற்ற காணிகளில் அபிவிருத்தி திட்டம்

## விவசாய அமைச்சு ஆலோசனை

**கொழும்பு,செப்.16**

**மீள் பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாத, எனினும் வயல் நிலம் என அடையாளம் காணப்படும் இடங்களில் பொருத்தமான அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்வதற்கு உரிமையாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.**

இதற்காக முறையான திட்டமொன்றை வகுக்குமாறு, விவசாய அபிவிருத்தித் திணைக்களத்துக்கு, விவசாய அமைச்சின் செயலாளர் சுமேத பெரேரா அறிவுறுத்தியுள்ளார்.

தற்போதைய நிலையில் மக்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்களைக் கருத்தில் கொண்டு, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் பணிப்புரையின் கீழ் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அத்தகைய நிலங்களை அடையாளம் காணும் செயற்பாடுகள், பிரதேச மட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன. அவை நிறைவடைந்த பின்னர் முறையான திட்டமொன்று வகுக்கப்படும்.

நாட்டில் நிலங்கள் எ,பி,சி எனும் 3 பிரிவுகளின் கீழ் பிரிக்கப்படுகின்றன. எ பிரிவின் கீழ் வயல் நிலங்களில் நெற்செய்கை மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்றன. அங்கு ஏனைய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை. அவ்வாறு வேறு ஏதேனும் செயற்பாடுகளை முன்னெடுத்தால் அவை சட்டவிரோதமாகும்.

பி பிரிவின் கீழ் வயல் நிலங்களில் ஒருபோக நெற்செய்கை, ஏற்றுமதிப் பயிர்ச்செய்கை அல்லது மரக்கறி செய்கையை முன்னெடுக்க முடியும். எந்தவொரு செய்கையையையும் முன்னெடுக்க முடியாத நிலங்கள் சி பிரிவுக்குள் உள்ளடக்கப்படும்.

அத்தகைய பி பிரிவு நிலங்களில் பொருத்தமான செய்கைகளை மேற்கொள்வதற்கான அனுமதியையே உரிமையாளர்களுக்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க-இ)

## பொதுக்கூட்டம்

கிளிநொச்சி,செப்.16

கிளிநொச்சி மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் பொதுக்கூட்டமும்,நிர்வாகத் தெரிவும் அண்மையில் இல்ல பரமலிங்கம் மண்டபத்தில் நடைபெற்றன.

தலைவராக ச.மோகனபவன்,பொதுச் செயலாளராக கு. பகீரதன், பொருளாளராக சி. பத்மசிறி ஆகியோர் ஏகமானதாக தெரிவு செய்யப்பட்டனர். (ஐ)

## இலவச பயிற்சிகள் ஆரம்பம்

தெல்லிப்பழை,செப்.16

வலிகாமம் கல்வி வலயத்தின் முறைசாராக் கல்வி அலகினால் நடத்தப்படும் ஆடை வடிவமைப்பும் தயாரிப்பும் மற்றும் அழகுக்கலை பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆடை வடிவமைப்பும் தயாரிப்பும் பயிற்சியும், யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரி மற்றும் ஆனைக்கோட்டை றோ.க.த.க.பாடசாலை ஆகியவற்றில் அழகுக்கலை பயிற்சியும் நடைபெற்றுவருகின்றன.

இப்பயிற்சி நெறிகளில் கற்பதற்கு ஆர்வமுள்ள பாடசாலையை விட்டு விலகியவர்கள் நிலையம் அமைந்துள்ள பாடசாலை அதிபருடன் தொடர்பு கொண்டு பயிற்சி நெறிகளில் இணைந்து கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பயிற்சிகள் அனைத்தும் இலவசமாக நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கசிப்பு உற்பத்தி; ஒருவர் கைது

கிளிநொச்சி,செப்.16

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுரமுணங்கு செல்லியா தீவு பகுதியில் இயங்கிய கசிப்பு உற்பத்தி நிலையம் பூநகரி பொலிஸாரால் அழிக்கப்பட்டது. சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து நேற்றுமுன்தினம் குறித்த பகுதியில் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இதன்போது 360 லீற்றர் கோடா, 20 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திப் பொருள்கள் என்பன கைப்பற்றப்பட்டன. சந்தேகத்தில் ஒருவர் கைதுசெய்யப்பட்டதுடன் அவரை நீதிமன்றில் முற்படுத்து வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-6)

## வீதியோர மரங்களில் விளம்பரங்கள்: நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை

### சாவ.நகரசபைத் தவிசாளர் முடிவு

சாவகச்சேரி, செப்.16

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீதியோர மரங்களில் தமது விளம்பரங்களை ஆணி அறைந்து பொருத்தியுள்ள நிறுவனங்கள் மீது நகரசபையினர் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளனர்.

கடந்த வருடங்களில் வீதியோரங்களில் நடப்பட்ட மரக்கன்றுகள் பல வளர்ந்துள்ள நிலையில் சில நிறுவனங்கள் ஆணி அறைந்து தமது விளம்பர பிரசுரங்களை பொருத்தியுள்ளனர்.

இதனால் சில மரங்கள் பட்டுப்போயுள்ளன. நீண்ட நாள்களாக நீர் ஊற்றி வளர்த்த மரக்கன்றுகளை ஆணி அறைந்து பட்டுப்போகச் செய்த நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக புகைப்பட ஆவணங்கள் சேகரிக்கப்பட்டுள்ளது எனவும் விரைவில் நிறுவனங்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

மத்திய மற்றும் மாகாண அரசுகளால் மேற்கொள்ளப்பட்ட பசுமைப் புரட்சித் திட்டத்தின் கீழ் வீதியோரங்களில் பெருமளவு மரக்கன்றுகள் நடப்பட்டு உள்ளூராட்சி சபைகளால் பௌசர்களில் தண்ணீர் கொண்டுவரப்பட்டு தினமும் ஊற்றி வளர்க்கப்பட்டது.

பல நிதி நிறுவனங்கள் தமது விளம்பரப் பலகைகளை கம்பங்களில் கம்பிகளால் கட்டி பொருத்தியிருந்தனர். அக் கம்பங்களுக்குச் சொந்தமான நிறுவனங்கள் அவற்றினை அப்புறப்படுத்தியதால் வீதியோரங்களில் காணப்படும் மரங்களில் ஆணி அறைந்து பொருத்தியுள்ளனர் எனவும் இதனால் பெரும் சிரமத்தின் மத்தியில் வளர்க்கப்பட்ட மரக்கன்றுகள் பட்டுப் போயுள்ளன எனவும் அவர் தெரிவித்தார். (ஐ-9)

## வலி.கிழக்கில் வீதி சீரமைப்பு

கல்வியங்காடு,செப்.16

வலி.கிழக்கு பிரதேச சபையின் வரவுசெலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் பல வீதிகள் சீரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் கல்வியங்காடு விநாயகர் வீதி 18 லட்சத்து 80 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சீரமைக்கப்பட்டு வருகிறது.

இதன் ஆரம்ப நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூர் வடக்கு சனசமூக நிலையத் தலைவர் பூ.லிங்கநாதன் தலைமையில் நடைபெற்றது.

பிரதேச சபைத் தவிசாளர் தி.நிரோஷ், பிரதேச சபை உறுப்பினர்கள் இ. ஐங்கரன், த.நிர்மலானந்தன், திருமதி.ஸ்ரீ.நகுலேஸ்வரி, திருமதி.குலகௌரி மற்றும் வட்டார உறுப்பினர் ந.கஜேந்திரகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வலி.கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் செயலாளரும்,பிரதேசத்தின் மூத்த பிரஜையுமான செ.குகதாசன் இவ் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்தார். (ஐ)

## 30 லீற்றர் கசிப்பு மீட்பு

கிளிநொச்சி,செப்.16

கிளிநொச்சி ஏ35 பரந்தன் வீதியின் முரசுமோட்டை பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மோட்டார் சைக்கிளையும் சுமார் 30 லீற்றர் வரையான கசிப்பையும் மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. போக்குவரத்துப் பொலிஸார் வீதியால் பயணித்துக் கொண்டிருந்த சந்தேகத்துக்கிடமான மோட்டார் சைக்கிளை வழி மறித்தனர். தப்பியோட முடியாமல் மோட்டார் சைக்கிளையும் அவர்கள் கொண்டுவந்த கசிப்பையும் கைவிட்டு தப்பியோடியுள்ளனர். இதனையடுத்து பொலிஸார் அவர்களால் கைவிடப்பட்ட மோட்டார் சைக்கிளையும், பொலித்தீன் பை ஒன்றிலும் பாடசாலை புத்தகப்பை ஒன்றிலும் வைக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்ட கசிப்பையும் மீட்டுள்ளனர். (ஐ-222)

## வரவேற்பு நிகழ்வு

கொடிகாமம்,செப்.16

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் 2022 ஆண்டு புகுமுக மாணவர்களின் வரவேற்பு நிகழ்வு அதிபர் கி.விக்னராஜா தலைமையில் நேற்றுமுன்தினம் கல்லூரியின் பொன்சபாபதி மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளரும், கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் பழைய மாணவருமான த.சத்தியமூர்த்தி கலந்து கொண்டார். (ஐ-159)





## சந்தேகநபருக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி,செப்.16

ஹெரோய்ன் பவுடர் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதே இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ஐ-9)

# இது ஓர் இனத்துக்கான நாடு அல்ல ; மூவினத்தவருக்கும் சொந்தமானது

## பொலிஸ் பரிசோதகர் ஏ.எம்.கே.கமகே தெரிவிப்பு

**கொடிகாமம், செப்.16**

**ஓர் இனத்துக்கான நாடு அல்ல இது. மூவினத்தவருக்குமான நாடு இது. பொலிஸார் மக்களுக்காகவே தமது கடமைகளை ஆற்றுகின்றனர்.இந்தக் கடமைகளை சிறப்பாகச் செய்யவேண்டுமானால் பொதுமக்களின் ஒத்துழைப்பு கட்டாயமாகும். இவ்வாறு கொடிகாமம் பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் ஏ.எம்.கே.கமகே தெரிவித்தார்.**

கச்சாய் வடக்கில் அமைந்துள்ள ஒட்டங்கேணி சன சமூக நிலைய திறப்பு விழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொடிகாமத்தை பொறுத்தவரை அண்மைக் காலமாக கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. பெரும்பாலும் வீதிகளில் வழி மறித்து இடம் கேட்பது போன்று பாசாங்கு காட்டி கொள்ளை அடிக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இவ்வாறான சம்பவங்களைத் தடுப்பதற்கு பொதுமக்கள் விழிப்பாக இருக்கவேண்டும்.

அத்துடன் இந்தப் பகுதியில் ஜாதி, மத பேதமின்றி நீங்கள் எல்லோரும் சேர்ந்து செயற்படுகின்றமை மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது.-என்றார்.

(ஜ-159)



# அங்காடி வியாபாரிகளை சந்தித்தார் சாவ.தவிசாளர்

கொடிகாமம், செப்.16

கொடிகாமம் பொதுச் சந்தையில் அங்காடி வியாபாரம் இடமாற்றப்பட்டதையடுத்து பாதிப்புக்குள்ளான அங்காடி வியாபாரிகளைச் சந்தித்த சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களையும் நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன்போது உபதவிசாளர் செ.மயூரன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களான சு.கேதீஸ்வரன் அ.நிமலரோகன் மற்றும் விக்கினேஸ்வரன் வருமானவரி பரிசோதகர் கணேசமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

அங்கு அங்காடி வியாபாரிகள் தமக்கு உள்ள பிரச்சினைகளைத் தவிசாளரிடம் முன் வைத்து தாங்கள் ஏற்கனவே வியாபாரம் செய்த இடத்துக்கு மாற்றித் தருமாறு கேட்டுக் கொண்டனர்.

அங்காடி வியாபாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்ட பின்னர் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தவிசாளர் தெரிவித்தார்.

(ஜ-159)



# கலந்துரையாடல்

கிளிநொச்சி,செப்.16

ஆரம்ப பாடசாலைகளின் நூலகங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் நூலக செயற்பாடுகளை பயன்பாடுடைய வகையில் நடைமுறைப்படுத்தல் என்பன தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சியில் நடைபெற்றது.

கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளை அலுவலகத்தில் சிறகுகள் அமையத்தின் ஏற்பாட்டில் இந் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

சர்வதேச மருத்துவ நல அமைய நிறுவனத்தால் பாடசாலைகளுக்கான நூலகங்களை வலுப்படுத்தும் செயற்பாடுகளின் அடிப்படையில் இந்தக் கலந்துரையாடல் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது என தெரிவிக்கப்பட்டது. (ஜ-222)

# சடலத்தை அடையாளம்காண உதவி கோரும் பொலிஸார்

வவுனியா,செப்.16



வவுனியா பொது மருத்துவமனையின் சவச் சாலையில் வைக்கப் பட்டுள்ள நபர் ஒருவரின் சடலத்தை அடையாளம் காட்டுமாறு பொதுமக்களிடம் பறயனாலங்குளம் பொலிஸார். உதவியைக் கோரியுள்ளனர்

கடந்த ஓகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி பறயனாலங்குளம் பகுதியிலுள்ள தற்காலிக கடை ஒன்றிலிருந்து இந்த சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

எனினும் சடலமாக மீட்கப்பட்டவர் யார் என இன்றுவரை அடையாளம் காணப்பட வில்லை .

சடலமாக மீட்கப்பட்டவர் கறுப்பு நிற நீளக்காற்சட்டையும், வெளிர் நிறமுடைய சேட்டும் அணிந்திருந்தார். குறித்த நபரை அடையாளம் கண்டால் பொதுமக்கள் 0243242448. மற்றும் 0718592115 ஆகிய இலக்கங்களுக்கு அழைத்து பொலிஸாருக்கு தகவல் தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஜ-110)

# காணி வழங்கல் தொடர்பில் கலந்துரையாடல்

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் காணி வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் பிரதேச செயலாளர் அ.அகிலன் தலைமையில் நடைபெற்றது.

காணி தேவை எனக் கோரி தனியார் நிறுவனம், தனிநபர்கள், மதத் தலங்கள், பண்ணையாளர்கள், அரச திணைக் களங்கள் உள்ளிட்டவை விண்ணப்பித்திருந்தன. இந்த நிலையில் காணி வழங்குவது தொடர்பாக 36 விண்ணப்பங்கள் எடுக்கப்பட்டு பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பிரதேச சபை உறுப்பினர்கள், கிராம அலுவலர்கள், திணைக்கள அலுவலர்களுக்கு இடையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது 12 விண்ணப்ப உரிமையாளருக்கு காணி வழங்குவதாக தீர்மானம் எடுக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஜ



# விளையாட்டு முற்றம் சீரமைத்து திறப்பு

வயாவிளான், செப்.16

வயாவிளான் குட்டியப்புலம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கான விளையாட்டு முற்றம் சீரமைக்கப்பட்டு அண்மையில் திறக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் பாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரான்ஸில் வசிக்கும் மயூரன் வேலுப்பிள்ளை தனது பிறந்தநாளை முன்னிட்டு விளையாட்டு முற்றம் சீரமைப்புக்கான உதவியை வழங்கியுள்ளார். (ஐ)

# கோழிக் குஞ்சுகள் கையளிப்பு

முல்லைத்தீவு,செப்.16

புதுக்குடியிருப்பு மற்றும் முள்ளியவளை ஆகிய பகுதிகளில் தெரிவுசெய்யப்பட்ட 18 பயனாளிகளுக்கு வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரனால் கோழிக் குஞ்சுகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

புலம்பெயர்ந்து லண்டனில் வசிக்கும் அந்தோனி சூசைப்பிள்ளை, தர்மலிங்கம் சுபாஸ்கரன் ஆகியோரின் நிதிப் பங்களிப்பில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரனும் கலந்துகொண்டார். (ஜ-246)



# நஞ்சு கொடுத்து மாடுகள் கொலை

*குற்றவாளிக்கு 5 லட்சம் தண்டம்*

தருமபுரம்,செப்.16



பயிர்களை அழித்துவரும் மாடுகளை கட்டுப்படுத்த மாட்டுக்கு நஞ்சைக் கரைத்து வைத்ததில் இரண்டு மாடுகள் இறந்துள்ளன.

இந்தச் சம்பவம் தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குமாரசாமிபுரம் பகுதியில் அண்மையில் இடம்பெற்றது.

இதனையடுத்து சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக் கொண்டமையை அடுத்து அவருக்கு ஜந்து லட்சம் ரூபா தண்டம் வழங்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். (ஜ-113)



# மின் விளக்குகள் அன்பளிப்பு

மன்னார்,செப்.16

மன்னார் வெள்ளாங்குளம் கிரா துக்கு ஒரு தொகுதி மின் விளக்கு கையளிக்கப்பட்டன.

மன்னார் வெள்ளாங்குளம் கணே புரம் பகுதியில் பல காலமாக விளக்குகள் பொருத்தப்பட இருந்த இடங்களை அடையா கண்டு அப்பகுதி மக்களிடம் தொகுதி மின் விளக்குகள் கைய கப்பட்டுள்ளன.

இந்த மின் விளக்குகளை வ நாடாளுமன்ற உறுப்பினர் செல் அடைக்கலநாதனின் செயலா வசந் தனது சொந்த நிதியில் இரு வழங்கியுள்ளா (ஜ-213

# மீள்புதுப்பிக்கத்தக்க சக்திகளினூடாக மின்னுற்பத்தி திட்டங்களை வகுக்குக!

## ஜனாதிபதி கோத்தாபய ஆலோசனை

**கொழும்பு,செப்.16**
**2030 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த மின் தேவையின் 70 வீதத்தை மீள் பிறப்பாக்க சக்தி வள மூலங்களின் மூலம் உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.**

சூரிய சக்தி, காற்று மற்றும் நீர்மின்சார உற்பத்தி கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
காலநிலை மாற்றம் காரணமாக அனல் மின் மற்றும் பெற்றோலியம் போன்ற எரிபொருள்களை தவிர்த்து உலகின் அனைத்து நாடுகளும் மீள்பிறப்பாக்க சக்தி வளத்தை நாடி வருகின்றனர்.
நாட்டின் மின் தேவையின் வருடாந்த அதிகரிப்பு 6 வீதமாகும். அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படுவதுடன் இணைந்ததாக மின்சக்தி வளத்துக்கான கேள்வி வேகமாக அதிகரிப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது.
மீள்பிறப்பாக்க சக்திவள அபிவிருத்திக்கு அரசாங்கம் அதிகம் முன்னுரிமையளித்துள்ளது. அதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறு அனைத்து நிறுவனங்களுக்கும் சுற்றறிக்கை வெளியிடப்படவுள்ளது.
மன்னார், பூநகரி மற்றும் சியம்பலாண்டுவ பிரதேசங்களில் காற்று மின் பிறப்பாக்கிகளை நிர்மாணித்து, தேசிய மின்சக்தி முறைமைக்கு குறிப்பிடத்தக்களவு மீள்பிறப்பாக்க சக்தி வளத்தை இணைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஜ-இ)



# மாணவர்களுக்கு முகக் கவசங்கள்

புதுக்குடியிருப்பு, செப்.16
முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு கோட்டக் கல்விப் பணிமனைக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான முகக் கவசங்கள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன.
செரண்டிப் சிறுவர் இல்லத்தால் 80 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆயிரத்து 650 முகக் கவசங்கள் ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் வைத்து புதுக்குடியிருப்பு கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.சுப்பிரமணிஸ்வரனிடம் கையளிக்கப்பட்டன.
இதனைத் தொடர்ந்து மாணவர்களின் தேவைப்பாட்டுக்கு அமைய பாடசாலைகளுக்கு முகக் கவசங்கள் பகிர்ந்து வழங்கப்படும் என்று கோட்டக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (ஜ-159)

# ஊழியர் குறைப்பு தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

கொழும்பு, செப்.16
கொரோனாத் தொற்று காரணமாக தொழில் நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஊழியர் குறைப்பு தொடர்பில் ஒரு வாரத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. தொழில் ஆணையாளர் நாயகத்துக்கு தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டிசில்வா இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.
தொழிலாளர் நலன்புரி சங்கத்தினர் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வாவை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.
இதன்போது அவர்கள், தொழில் நிறுவனங்களில் ஊழியர் குறைப்பை எக் காரணம் கொண்டும் மேற்கொள்ளமாட்டோம் என கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற கலந்துரையாடலில் முதலாளிமார் இணக்கம் தெரிவித்திருந்தனர். இருந்தபோதும் பல்வேறு நிறுவனங்களில் முதலாளிமார் நினைத்தவாறு ஊழியர்களை வெளியேற்றியுள்ளனர்.
இது தொடர்பாக எமது சங்கம் தொழில் திணைக்களத்தில் முறைப்பாடு தெரிவித்திருந்தபோதும் இது வரை அதுதொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளனர். இதற்கமைவாகவே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (வ-இ)



வவுனியாவின் மூத்த பிரஜையும் ஆன்மீகவாதியுமான கவிஞர் சிவநெறிபுரவலர் சி.ஏ. இராமசாமியின் 80 ஆவது பிறந்ததினம் நேற்று செவ்வாய்க்கிழமை வவுனியாவில் கொண்டாடப்பட்டது. வவுனியா எம்.ஜி.ஆர் நற்பணிமன்றம் மற்றும் வவுனியா வர்த்தகர்கள் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்து நடத்தினர். (ஜ-110)

# வல்லிபுரம் திருவிழாவில் குறுகிய சேவை இல்லை

பருத்தித்துறை,செப்.16
வரலாற்றுச் சிறப்புமிக்க வல்லிபுரம் ஆலயத்துக்கான குறுகிய போக்குவரத்து சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என பருத்தித்துறை சிற்றூர்தி சங்கத் தலைவர் துரைசிங்கம் தெரிவித்தார்.
வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 30 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.
இவ் விழாவுக்கென குறுகிய போக்குவரத்து சேவைகள் நடைபெறாது. பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் போக்குவரத்து அல்லது யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கு வரும் போக்குவரத்து வல்லிபுரம் ஆலயத்துக்குச் சென்று வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.
பருத்தித்துறை பிரதேச செயலகத்தால் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு பயணிகளின் சனநெரிசல்களை கட்டுப்படுத்துவதற்காகவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-422)

# சிகிச்சைக்கு வருவோருக்கு முகக் கவசம் கட்டாயம்

சாவகச்சேரி, செப். 16
சாவகச்சேரி மருத்துவமனையில் நடத்தப்படும் கிளினிக்குகளுக்கு வருவோர் கட்டாயம் முகக் கவசம் அணிந்து வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
கொரோனாத் தொற்று இன்னமும் நீங்காத நிலையில் பொதுமக்கள் முகக் கவசம் அணிவது குறைந்து வருகிறது. மருத்துவமனையில் நடத்தப்படும் கிளினிக் நேரடியாக மருத்துவரின் பரிசோதனையின் பின்னரே சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.
அத்துடன் காலை 7.30 மணி தொடக்கம் தாதிய உத்தியோகத்தர் ஒருவரால் கொரோனாத் தொற்று பரிசோதனை மேற்கொண்ட பின்னரே உரிய சிகிச்சை கொப்பிகள் பதிவு செய்யப்படுகிறது.
இதற்காக நோயாளர்கள் நீண்ட வரிசையில் நிற்க வேண்டிய நிலை காணப்படுகிறது.
இதனால் சிகிச்சை பெற வருவோர் கட்டாயம் முகக் கவசம் அணிந்து வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொது மருத்துவ கிளினிக்குக்கு முகக்கவசம் அணியாமல் வந்தவர்கள் திருப்பி அனுப்பப்பட்டமையால் கடைகளில் முகக் கவசம் வாங்கி அணிந்து வந்ததைக் காண முடிந்தது.
சாவகச்சேரி மருத்துவமனை கிளினிக்குகளுக்கு தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி, வடமராட்சி கிழக்கு போன்ற இடங்களில் இருந்து பொதுமக்கள் வருகை தருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-9)

# பிளாஸ்ரிக் அற்ற சுற்றாடல் செயற்றிட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.16
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இரசாயனவியல் சமூகத்தால் "பிளாஸ்ரிக் அற்ற சுற்றாடலை நோக்கி" என்ற தொனிப்பொருளில் செயற்றிட்டம் ஒன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டது.
கொக்கோ கோலா நிறுவனத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படவுள்ள இந்தச் செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இரசாயனவியல் துறையின் தலைவர் கலாநிதி பி.ஜங்கரன் தலைமையில் நடைபெற்றது.
நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் வி.காண்டீபன், விஞ்ஞான பீட பீடாதிபதி பேராசிரியர் பு.ரவிராஜன் மற்றும் விரிவுரையாளர்கள், அலுவலர்கள், ஊழியர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.
இந்தச் செயற்றிட்டத்தின் கீழ், பல்கலைக்கழகச் சுற்றாடலில் சேரும் பிளாஸ்ரிக் பொருள்களைச் சேகரிப்பதற்கான கொள்கலன்கள் ஆங்காங்கே நிறுவப்படவுள்ளன.
அவற்றில் சேரும் பிளாஸ்ரிக் கழிவுப் பொருள்களைக் கிரமமாக அகற்றுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. (ஜ-20)

# திருவள்ளுவர் விழா



மன்னார்,செப்.16
வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் மன்னார் மாவட்டச் செயலகம் நடத்தும் 2020 ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விழா நாளை வியாழக்கிழமை மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 9.30 மணியளவில் நடைபெறவுள்ளது.
மன்னார் மாவட்டச் செயலாளர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் திருக்குறள் பற்றிய பாவோதல், சிந்தனை, சொற்பொழிவுகள் மற்றும் இன்றைய சமூகம் வள்ளுவர் காட்டிய வழியை தழுவிச் செல்கிறது. விலகிச் செல்கிறது என்னும் தலைப்பில் சிறப்புப் பட்டிமன்றம் என்பன நடைபெறவுள்ளன. (ஜ-213)

## நினைவேந்தலுக்கு.......

போல் நிராகரித்தார்.

திலீபனின் நினைவேந்தலுக்கு தடைகோரி யாழ் பொலிஸ் நிலைய பொலிஸார் தாக்கல் செய்த மனுவை ஏற்று, நினைவேந்தலுக்கு யாழ் நீதிமன்றம் தடைவிதித்திருந்தது. இந்த நிலையில், நேற்றுத் திருத்த மனு சமர்ப்பிக்கப்பட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ.கஜேந்திரன், வ.பார்த்தீபன் உள்ளிட்டவர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு சார்பில் சட்டத்தரணிகள் வி.திருக்குமரன், கு.குருபரன் ஆகியோர் முன்னிலையாகினர்.

இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது. விடுதலைப் புலிகள் தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கம். திலீபனை நினைவு கூருவது தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பொன்றின் உறுப்பினரை நினைவுகூருவதாக அமையும். அதன்மூலம் தடை செய்யப்பட்ட அமைப்பொன்றை நினைவுகூருவதாக அமையும். அது, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படக்கூடிய குற்றம். தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பின் உறுப்பினரை நினைவுகூருவதை மன்று தடை செய்கிறது என தீர்ப்பு வழங்கப்பட்டது. (ம26)

## அனைவரையும்.....


மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகத் தமிழ்க் கட்சிகள் நேற்று ஆராய்ந்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இந்தச் சந்திப்புக்கான ஏற்பாடுகளை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மேற்கொண்டிருந்தார். இந்தச் சந்திப்பில் பல விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. அனைத்துக் கட்சிகளையும், பொது அமைப்புக்களையும், சிவில் செயற்பாட்டாளர்களையும் இணைத்து இந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்று இந்தச் சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அனைத்துத் தரப்பினரையும் இணைக்கும் நடவடிக்கைகளை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா முன்னெடுப்பார் என்றும், எதிர்வரும் வெள்ளிக்கிழமையளவில் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய கலந்துரையாடல் ஒன்றுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வது என்றும் இந்தச் சந்திப்பில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. (எ)

## முதியவரை மோதி தப்பியது வாகனம்



கிளிநொச்சி, செப்.16

சைக்கிளில் பயணித்த முதியவர் ஒருவரை மோதிய வாகனம் தப்பிச் சென்றுள்ளது.

முதியவர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி, பரந்தன் ஏ9 வீதியில் நேற்று இரவு 7.30 மணியளவில் நடந்துள்ளது. முதியவரை மோதிய வாகனம் அந்த இடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளது. பரந்தனைச் சேர்ந்தவரே காயமடைந்துள்ளார். அவர் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-6)


## WALK – IN – INTERVIEW
## NIHR AF Project - Faculty of Medicine, University of Jaffna

**Post of Coordinator for Logistics and Finance - 01 Vacancy and Coordinator for Data Collection and Data Quality - 01 Vacancy (Full Time, on Contract Basis)**

**University of Jaffna, Sri Lanka embarked on a medical research on Global Health Research on Atrial Fibrillation Management Project in partnership with University of Birmingham, UK Funded by National Institute for Health Research (NIHR), UK**

**Required qualifications and experience:**

1. **Coordinator - Logistics & Finance :**

**Requirements:**

- A bachelor degree from UGC approved University / HEI or other equivalent qualification.
- Proven working experience of minimum one year experience in financial and logistics management, deep understanding of financial principles and practice, proficient in standard logistics software

**Remuneration:** A monthly salary of LKR 45,000.00 inclusive of CLA. Appointee will be a contributor to the Employee Provident Fund by means of monthly deduction from his/her salary an amount equal to eight percent (8%) of the earnings and the employer shall contribute a sum equal to twelve percent (12%) of the earnings. In addition three percent (3%) of monthly earnings will be contributed by the employer to the Employee Trust Fund.

2. **Coordinator - Data Collection & Data quality :**

**Requirements:**

- A bachelor degree from UGC approved University / HEI or other equivalent qualification.
- Proven working experience as a data analyst and strong analytical skills with the ability to collect, organize, analyze, and disseminate significant amounts of information with attention to detail and accuracy, Knowledge of statistics and experience using statistical packages for analyzing datasets.

**Remuneration:** A monthly salary of LKR 45,000.00 inclusive of CLA. Appointee will be a contributor to the Employee Provident Fund by means of monthly deduction from his/her salary an amount equal to eight percent (8%) of the earnings and the employer shall contribute a sum equal to twelve percent (12%) of the earnings. In addition three percent (3%) of monthly earnings will be contributed by the employer to the Employee Trust Fund.

**General Conditions:**

- Should be a citizen of Sri Lanka

**Professional competencies required:**

- High level of proficiency in written and spoken English and Tamil
- High level of IT literacy, especially in the areas of Electronic mailing, Word and Excel for office environment, and project management platforms.
- Ability to communicate effectively in Tamil and in English with officials and different stakeholders.
- Ability to function effectively in a team environment inspiring trust and cooperation of other team members.
- Ability to achieve the targets in time align plan.

Walk in Interview for the above positions - On Contract Basis will be held on **23.09.2020 from 3.00 PM to4.00PM, at the Board Room, Faculty of Medicine, University of Jaffna.**

Eligible candidates are requested to be present for an interview with self-prepared separate application for each post in the prescribed format available in the University website along with relevant original educational qualification certificates, birth certificate, experience certificates and National Identity Card on the date and the time mentioned above.

For further details please refer the University of Jaffna website – www.jfn.ac.lk

**Registrar**
**University of Jaffna**


## மரண அறிவித்தல்



மலர்வு 31 . 03 . 1953

உதிர்வு 15 . 09 . 2020

### கணபதிப்பிள்ளை சரவணமுத்து

(அறங்காவலர் எழுதுமட்டுவாழ் மருதங்குளம் மஹா கணபதி தேவஸ்தானம் )

மிருசுவில் வடக்கு மிருசுவிலை ப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சரவணமுத்து நேற்று (15.09.2020) இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - நாகமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் பாலசுப்பிரமணியம், கணேசமூர்த்தி (ஜேர்மனி) காலஞ்சென்ற சிவஞானவதி மற்றும் கனகசபாபதி, இரத்தினசபாபதி (ஓய்வுநிலை ஆசிரியர் ) சிவயோகநாயகி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு சகோதரனும் இராசம்மா (ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்) செல்வராணி (ஜேர்மனி ) துரைராஜா (சுவிஸ்) சிவரஞ்சனி, இராஜேஸ்வரி (ஓய்வுநிலை ஆசிரியை) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2020) புதன் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மிருசுவில் பெரியானோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மிருசுவில் வடக்கு ,
மிருசுவில்.

தகவல்: குடும்பத்தினர்.
கனகசபாபதி. 077 656 9874
இரத்தினசபாபதி 077 058 3625

## மரண அறிவித்தல்

### திருமதி கோபாலப்பிள்ளை மகாலட்சுமி (சின்னமணி)



வேலணை கிழக்கு 3 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் உடையார் ஒழுங்கை பொற்பதி வீதி. கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கோபாலப்பிள்ளை மகாலட்சுமி 14.09.2020 திட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காங்கேசு - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கோபாலப்பிள்ளையின் அன்பு மனைவியும், ஜெயந்தி (ஆசிரியர் - யாழ் இந்து மகளிர் கல்லூரி), ஜெயக்குமார் (ஜேர்மனி), ஜெயசுதா (கனடா), ஜெயசங்கர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், கமலேஸ்வரன் (ஆசிரிய ஆலோசகர், தென்மராட்சி வலயம்), சுபாஜினி (ஜேர்மனி), விந்தன் (கனடா), வித்தியா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், சங்கவி, சாம்பவி, ஆகாஷ், அபினாஷ், வைஸ்ணவி, விரிஷாத், வினித், இனியவள். ஈழவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் இராஜேஸ்வரி (சுவிஸ்), இராசலட்சுமி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சிவராசா, தங்கலெட்சுமி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிங்கராஜா, திருநாவுக்கரசு, மங்கையற்கரசி மற்று பரமேஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2020) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"தாயகம்"
உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 662 9992, 077 841 7579

## பெறுகை அறிவித்தல்
## சாவகச்சேரி பிரதேசசபை – கொடிகாமம்

2020/2021 (ஒக்டோபர் 15 – ஏப்ரல் 14) ஆம் காலப்பகுதிக்கான தனியார் சாரதி சேவைக்கான விலை மனுக்கோரல்

தலைவர், பிரதேசசபை, பெறுகைக்குழு அவர்களினால் சாவகச்சேரி பிரதேசசபையில் 2020/2021 (ஒக்டோபர் 15 – ஏப்பல் 14) ஆம் ஆண்டுக்கான சாரதி சேவையினை வழங்கு வதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களிட மிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| இல | சாரதி சேவை தேவைப்படும் இடம் | தேவைப்படும் சாரதிகளின் எண்ணிக்கை | வேண்டப்படும் பாதுகாப்பு பிணை | |
|---|---|---|---|---|
| | | பகல் | பாதுகாப்புப் பிணை தொகை | செல்லுபடியாகும் காலம் |
| 1 | தலைமை அலுவலகம், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் | 1 | ரூ 10000.00 | 01.10.2020-16.12.2020 |
| | மொத்தம் | 1 | | |

01. தனியார் சாரதி சேவையை வழங்குநர்கள் சாரதி சேவை வழங்கலுக்கான வியாபாரப்பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 3 ஆண்டுகள் இச் சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.

02. சேவை வழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ் மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

03. சேவை வழங்குநர்களின் தனியார் சாரதி பெறுகைக்கான ஆங்கிலத்தில் மட்டும் உள்ள பெறுகை ஆவணத்தை சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமத்தில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 16.09.2020 தொடக்கம் 30.09.2020ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூ 2000.00 (Vat நீங்கலாக ) ஐச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

04. பெறுகை ஆவணங்கள் 01.10.2020ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு "தலைவர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்" என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். பெறுகைப்பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிப்படுவர்.

05. கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோரு வதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

**கந்தையா வாமதேவன்**
**தலைவர்**
**பெறுகைக்குழு**
**சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.**
**2020.09.16**

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை – பளை
## பளை பேருந்து தரிப்பிடத்திற்கு மேலுள்ள கடைகளை நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2020

| | | |
|---|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி | :- | 16.09.2020 தொடக்கம் 30.09.2020 பிற்பகல் 2.00 மணிவரை (அலுவலக நேரம்) |
| கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி | :- | 30.09.2020 பிற்பகல் 2.00 மணி |
| கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி | :- | 30.09.2020 பிற்பகல் 2.00 மணி |
| கேள்வி திறக்கப்படும் இடம் | :- | பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம் |

**பளை பேருந்து தரிப்பிடத்திற்கு மேலுள்ள கடைகள்**

| இல | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | BUS-4 | 168,000.00 | 16,800.00 | 2,000.00 |
| 02 | BUS-6 | 285,000.00 | 28,500.00 | 2,000.00 |

**நியந்தனைகள்**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்கவேண்டும்.

03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை பளை"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக் கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி"** என்ற முகவரிக்கு 30.09.2020 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

05. மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்த வேண்டும் குறித்த மாத வாடகைப்பணத்தினை அடுத்த மாதம் 05 ஆம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக் கொள்ளவேண்டும் தவறும் பட்சத்தில் அதற்கான மாதக்கட்டணத்துடன் மாதாந்தக் கட்டணத்தின் 10% தண்டமாக அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும். டிசம்பர் மாதத்திற்குரிய வாடகை பணத்தினை டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தவேண்டும்.

06. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையினை முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ளவேண்டும்.

07. சித்திரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக் கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.

08. சித்திர குத்தகைதாரர் பாதுகாப்பு வைப்புபணமாக 03 மாத கால வாடகை தொகையினை முற்பணமாக செலுத்த வேண்டும்.

09. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

10. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளர் / செயலாளருக்கு உண்டு.

11. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**சுப்பிரமணியம் சுரேன்.**
**தவிசாளர்**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை.**
**16.09.2020**

# திடீர் நெஞ்சுவலி ஆசிரியர் உயிரிழப்பு

கொடிகாமம், செப்.16

தென்மராட்சி உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று மாலை நடந்துள்ளது. உசன் மிருசுவில் பகுதியைச் சேர்ந்த மாரிமுத்து சிவகுமார் (வயது - 49) என்பவரே உயிரிழந்துள்ளார்.
பாடசாலையில் கற்பித்துக் கொண்டிருந்த ஆசிரியருக்கு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டுள்ளது. அவர் உடனடியாக மிருசுவில் மருத்து வமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்குச் சிகிச்சை வழங்கப்பட்டு வீடு திரும்பியுள்ளார்.
அவருக்கு மீண்டும் நெஞ்சு வலி ஏற்பட்டதை அடுத்து அவர் சாவ கச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும் அவர் முன்னரே உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப் படுத்தியுள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை கொடிகாமம் பொலி ஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ159,9)

**யாழ் - போதனா வைத்தியசாலை**

## புனித ஆரோக்கிய அன்னையின் வருடாந்த திருவிழா
## 20.09.2020



***அன்னையின் பரிந்துரையிலும் பாதுகாப்பிலும் நம்மை நாமே ஒப்புக்கொடுப்போம்"***

| | |
|---|---|
| **17.09.2020** வியாழக்கிழமை (கொடியேற்றம்) | **"ஏழைகளை அரவணைக்கும் அன்னை மரியா"** 2 அரசர்கள் 4:1-7 யோவான் 2:1-12 |
| **18.09.2020** வெள்ளிக்கிழமை (ஒப்புரவு தினம்) | **"பாவம் பரிகாரத்திற்கு அழைக்கும் அன்னை "** யோனா 3:1-10 யோவான் 8:1-11 |
| **19.09.2020** சனிக்கிழமை (நற்கருணை பெருவிழா) | **"நற்கருணையே எம் வாழ்வின் நம்பிக்கை"** 1கொறிந்தியர் 11:23-31 யோவான் 6:51-58 |
| **20.09.2020** ஞாயிற்றுக்கிழமை (திருவிழா) | **"அன்னையின் வழியில் நாம் வாழ்ந்திட"** எசாயா 7:10-16 1யோவான் 4:7-16 லூக் 1:26-38 |

- ◆ திருவிழாவிற்கான ஆயத்த நாட்களில் வழிபாடுகள் மாலை 4.30 மணிக்கு திருச் செபமாலையுடன் ஆரம்பமாகும்.
- ◆ 19.09.2020 திருப்பலியைத் தொடர்ந்து நற்கருணை வழிபாட்டோடு ஆசீர்வாதம் இடம்பெறும்.
- ◆ திருவிழாத் திருப்பலி 20.09.2020 அன்று காலை 7.00 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும்.
- ◆ ஆயத்த நாட்களின் சிறப்பு வழிபாடுகளிலும் திருவிழாத் திருப்பலியிலும் முழுமையாகப் பங்குபற்றி ஆரோக்கிய அன்னையின் ஆசீர்பெற அன்போடு அழைக்கின்றோம்.
- ◆ கொரோனா அச்சுறுத்தல் காரணத்தினால் சமூக இடைவெளியையும் சுகாதார வழி முறைகளையும் பின்பற்றி வைத்தியசாலை சமூகத்துடன் ஒத்துழைத்து வழிபாடுகளிலும் திருப்பலிகளிலும் பயபக்தியோடு பங்கெடுக்க பணிவோடு வேண்டுகின்றோம்

**கத்தோலிக்க ஆன்மீக செயற்பாட்டுக் குழுமம்**
**யாழ் போதனா வைத்தியசாலை.**

## வகை II, வகை III பாடசாலைகளுக்கான அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

மாகாணக் கல்விப் பணிப்பாளர் அவர்களின் NP/20/ET/D/03 இலக்க 2020.08.07ஆம் திகதிய கடித அனுமதிக்கமைவாக, எமது வலயத்தில் கீழ்க்குறிப் பிடப்படுகின்ற பாடசாலைகளில் ஏற்பட்ட அதிபர் வெற்றிடங்களினை நிரப்புவதற்கு இலங்கை அதிபர் சேவை தரமுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படு கின்றது.

பொருத்தமான தகைமையுடையவர்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக விண்ணப்பத்தினை தயாரித்து, 2020.10.01 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக எமக்குக் கிடைக்கக் கூடியவாறு வலயக் கல்விப்பணிப் பாளர், வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படு கின்றீர்கள்.

**அதிபர் பதவி வெற்றிடம் உள்ள பாடசாலைகளின் விபரம்:**

1. கிளி / செல்வாநகர் அ.த.க.பாடசாலை - வகை II
2. கிளி / கலவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயம் - வகை II
3. கிளி / கண்ணமையம்மன் வித்தியாலயம் - வகை II
4. கிளி / கட்டைக்காடு அ.த.க.பாடசாலை - வகை III
5. கிளி / செம்பன்குன்று அ.த.க.பாடசாலை - வகை III
6. கிளி / யூனியன்குளம் அ.த.க.பாடசாலை - வகை III

**வகை II, வகை III பாடசாலைகளுக்கு அதிபர் பதவிக்கு விண்ணப்பிப் பதற்கான தகைமைகள்:**

விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது 03 வருட காலமேனும் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.
இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த விண்ணப்பதாரி தற்போது கடமையாற் றும் பாடசாலையில் மூன்று (03) வருட சேவையை முழுமையாக நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

a) பொருத்தமான அதிபர் தரத்தினுடைய பாடசாலையை சேவை நிலையமாகக் கொண்டிராதவர்களுக்கு இது பொருத்தமற்றது. (உதாரணமாக இ.அ.சே II ஐச் சேர்ந்த ஒருவர் தரம் III பாடசாலையில் கடமையாற்றிக் கொண்டிருப்பின், அவர் விண்ணப்பிக்க முடியும்)

b) பிரதி அதிபராக, பகுதித் தலைவராக மற்றும் பொறுப்புக்கள் வழங்கப்படாதுள்ள இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களுக்கு இது பொருத்தமற்றது.

* வகை II பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவை II இனைச் சேர்ந்தவர் களும் வகை III பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவை III இனைச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்க முடியும். இலங்கை அதிபர் சேவை II இனைச் சேர்ந்தவர்களது விண்ணப்பம் கிடைக்கப் பெறாத சந்தர்ப்பத்தில் அதிபர் சேவை III இனைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கருத்தில் கொள்ளப்படும்.

* நேர்முகத்தேர்வுச் சபையின் நேர்முகப்பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவுமேற்கொள்ளப்பட்டு சேவை நிலையம் வழங்கப்படும்.

* மேற்படி தெரிவுசெய்தல் தொடர்பாக நேர்முகத்தேர்வுச் சபையின் முடிவே இறுதி யானதாகும்.

**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**கிளிநொச்சி.**

# கேள்வி அறிவித்தல்
## யாழ் மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவு சங்கம்
## திருநெல்வேலி கிழக்கு- கோப்பாய்

யாழ் மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவு சங்க கேள்விக்குழுவால் கீழ் குறிக்கப்படும் நிர்மாண வேலைகள் மற்றும் பொருட் கொள்வனவிற்கு கேள்வி கோரப்படுகின்றன.நிர்மாண வேலையிற்கு விண்ணபிப்பதற்கு CIDA நிறுவனத்தில் கட்டிடவேலையில் குறைந்தது வலுவில் C9 தரத்தினை கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் பொருள் விநியோகத்திற்கு விண்ணபிப்போர் குறைந்தது மூன்று வருடம் குறித்த துறையில் யாழ் மாவட்டத்திற்குள் பொருள் விநியோகம் மற்றும் பராமரிப்பு வேலைகளை செய்தமையிற்கான சான்றிதழ்களை சமர்பிக்கவேண்டும். ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர் தலைமை அலுவலகம் யாழ் மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் திருநெல்வேலி கிழக்கு- கோப்பாய் என்ற முகவரி ஊடாக அல்லது 0213212926 என்ற தொலைபேசி ஊடாக தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும்.

1. கேள்வி ஆவணங்களை கீழ் குறிக்கப்படும் மீளளிக்கப்படாத, மீளளிக்கப்படக்கூடிய வைப்புத் தொகையினை **16.09.2020 - 29.09.2020 திகதிக்குள் 9.00 am -2.30 pm இடையில்** அலுவலகத்தில் செலுத்தி எழுத்து மூல விண்ணப்பத்தினை சமர்பித்து பெற்றுக் கொள்ளமுடியும்.
2. அரக்கிடப்பட்ட கேள்வி ஆவணங்கள் **தலைவர் கேள்வி சபை யாழ் மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் திருநெல்வேலி கிழக்கு- கோப்பாய்** என்ற முகவரியிற்கு பதிவு தபாலில் அல்லது யாழ் மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் திருநெல்வேலி கிழக்கு- கோப்பாயில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் 30.09.2020 ம் திகதி **2.30 pm** முன்னர் இடப்பட வேண்டும்.பிந்திய ஆவணங்கள் நிராகரிக்கப்பட்டு அன்றைய தினம் உடனடியாகவே கேள்விகள் திறக்கப்படும்.
3. கேள்வியின் செல்லுபடிக்காலம் 60 தினங்கள் என்பதுடன் பிணை வைப்பின் செல்லுபடிக்காலம் கேள்வி திறக்கப்பட்ட தினத்திலிருந்து 88 தினங்கள் ஆகும்.
4. முன் கேள்விக் கூட்டம் யாழ் மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் திருநெல்வேலி கிழக்கு- கோப்பாயில் **21.09.2020 அன்று காலை 10.00 மணியிற்கு** நடைபெறும்.
5. கேள்வி சபையால் கேள்விகளை ஏற்க, நிராகரிக்க மற்றும் இரத்து செய்வதற்கான உரிமையினை கொண்டுள்ளது. கேள்வி சபையின் முடிவே இறுதியானது.

| BID ID | Description of Goods/Work | Items | Qty | Bid Security | | Non Refundable fund Rs. |
|---|---|---|---|---|---|---|
| | | | | Amount (Rs.) | Valid Period Up to | |
| Yarlco/PROC/Cons/2020 | Construction of boundary wall | Construction of boundary wall | 80M 50M | 16,000 | 28.11.2020 | 3,000 |
| Yarlco/PROC/ Lap top/2020 | Laptops | Laptop i5 | 02 | 4,000 | 28.11.2020 | 1,000 |
| Yarlco/PROC/Vac. mach/2020 | Vacuum Packing Machine | Vacuum Packing Machine | 1 | 3,000 | 28.11.2020 | 1,000 |
| Yarlco/PROC/Milk Toffee/2020 | Milk Toffee/KHOA Making Machine | Milk Toffee/KHOA Making Machine (100-200 Litters per Hour) | 01 | 10,000 | 28.11.2020 | 2,000 |
| Yarlco/PROC/Milk Chil/2020 | Milk Chilling Tank | Milk Chilling Tank-200 Litters | 02 | 10,000 | 28.11.2020 | 2,000 |

தலைவர்
கேள்வி சபை
யாழ் மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவு சங்கம்
திருநெல்வேலி கிழக்கு- கோப்பாய்

# திடீரென பற்றிய தீயால் தென்னம் காணி நாசம்!

கிளிநொச்சி, செப்.16
திடீரெனப் பற்றிய தீயால் இயக்கச்சிப் பகுதியில் தென்னைகள் எரிந்து சாம்பலாகியுள்ளன.
இயக்கச்சி, வை.எம்.சி.ஏ. வீதியில் உள்ள தென்னம் காணி ஒன்றிலேயே தீ பரவியுள்ளது. அருகில் உள்ள வயல் நிலத்தில் ஏற்பட்ட தீ தென்னம் காணிக்கும் பரவியது என்று கூறப்படுகின்றது. தீ பரவியதை அடுத்து கரைச்சி பிரதேச சபையின் தீயணைப்பு வாகனங்களும், அருகில் உள்ள இராணுவ முகாமில் இருந்த தண்ணீர் பவுசரும் கொண்டுவரப்பட்டு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (எ6)



# மரண அறிவித்தல்



பிறப்பு
26 . 04 . 1939

இறப்பு
15 . 09 . 2020

## திருமதி செல்வரட்ணம் சிவமணி

யாழ். நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வரட்ணம் சிவமணி நேற்று (15.09.2020) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் யாழ். கைலாசபிள்ளை பூரணம் தம்பதியரின் அன்பு மகளும், யாழ். சண்டிலிப்பாய் சிவசம்பு அன்னம் தம்பதியரின் ஆசை மருமகளும், சண்டிலிப்பாயைச் சேர்ந்த செல்வரட்ணம் (இளைப்பாறிய பிரதம லிகிதர்-யாழ் மாநகர சபை) அவர்களின் ஆருயிர் மனைவியும், மங்கையர்க்கரசி, புவனேஸ்வரி (லண்டன்), செல்வேந்திரா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஈஸ்வரகாந்தா, குணசீலன் (லண்டன்), கலைவாணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுந்தரலிங்கம் (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான சிவலிங்கம், சோதிலிங்கம், சங்கரலிங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரியும், ராஜலட்சுமி (லண்டன்), கண்மணி (லண்டன்), சிவசோதி (பிரான்ஸ்), காலஞ்சென்ற தங்கரத்தினம் ஆகியோரின் மைத்துனியும், கஜேந்திரா-ஷாருகா, நிமலேந்திரா, வாசுகி, கைலாஷ், கைலேந்திரா, அனுஷ்கா, தனேந்திரா ஆகியோரின் ஆசை பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15.09.2020) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 4.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**077 966 8754, 077 597 5589**

தகவல்:
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



பிறப்பு
28 . 07 . 1972

இறப்பு
09 . 09 . 2020

## திருமதி ஹிமாலினி சத்தியசீலன்

கருகம்பனை கீரிமலையை பிறப்பிடமாகவும், கல்வயல் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் தற்போது ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஹிமாலினி சத்தியசீலன் 09.09.2020 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி (ஓய்வுபெற்ற அதிபர்) மற்றும் தெய்வநாயகி தம்பதியரின் அன்பு மகளும், சத்தியசீலனின் அன்பு மனைவியும், ஆதித்தனின் பாசமிகு தாயும், நளாயினி (ஜேர்மனி), ஸ்ரீராமகிருஷ்ணன், பவானி, ஸ்ரீதேவி (வலயக் கல்வி அலுவலகம் - தென்மராட்சி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் Katzenbachstrabe 58 70563 Stuttgurt ஜேர்மனியில் இன்று (16.09.2020) புதன்கிழமை நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிராம்புவில் மேற்கு,
கல்வயல், சாவகச்சேரி.

தகவல் :
**குடும்பத்தினர்.**

## திலீபனை......

அவர் மேலும் தெரிவித்ததாவது:
திலீபன் சாதாரண பொதுமகன் அல்லர். அவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பின் முன்னாள் தளபதிகளில் ஒருவர். இராணுவத்தினருக்கு எதிராகப் போரிட்டவர். போரில் பலத்த காயமடைந்து பல நோய்களால் பாதிக்கப்பட்டிருந்த அவர் பிரபாகரனின் வலுக்கட்டாயத்தின் பேரில் 12 நாள்கள் உண்ணாவிரதமிருந்து இறுதியில் உயிரிழந்தார். திலீபன் ஒரு பயங்கரவாதி. இந்த ஆட்சியில் பயங்கரவாதிகளை நினைவுகூர ஒருபோதும் அனுமதியில்லை.

வடக்கு, கிழக்கில் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுக்கு நீதிமன்றங்கள் வழங்கிய தடையுத்தரவுகளை நாம் வரவேற்கின்றோம். அந்த உத்தரவுகளை நடைமுறைப்படுத்த வேண்டியது பொலிஸாரின் பொறுப்பு. இதை மீறி திலீபனை நினைவுகூர முற்படுபவர்கள் அவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் பாகுபாடின்றிக் கைதுசெய்யப்படுவார்கள்.

நீதிமன்றங்களின் உத்தரவுகளை எவரும் மீற முடியாது. அதை எவரும் சவாலுக்குட்படுத்தி கருத்துக்களை வெளியிடவும் முடியாது என்றார். (ஓ,5,22)

## விடுதலைப்புலிகளை....

வீண்விளைவுகளைச் சந்திக்க வேண்டாம் என்று வடக்கு, கிழக்கு தமிழர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தியாகதீபம்திலீபனின்நினைவேந்தலுக்கு நீதிமன்றம் விடுத்துள்ள தடையுத்தரவு தொடர்பிலும், தடை உத்தரவை மீறித் திலீபனை அஞ்சலித்த வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை தொடர்பிலும் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது
கடந்த நல்லாட்சியில் இருந்த சுதந்திரத்தை இந்த ஆட்சியிலும் தமிழர்கள் எதிர்பார்க்கக்கூடாது. தமிழர்கள் நாட்டின் சட்டத்துக்கும் இறையாண்மைக்கும் மதிப்பளித்துச் செயற்பட வேண்டும்.

போரில் உயிரிழந்த தமது உறவுகளை நினைவுகூரத் தமிழர்களுக்கு உரிமை உண்டு. அதை எவரும் தடுத்து நிறுத்த முடியாது. ஆனால், உயிரிழந்த பயங்கரவாதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளை நினைவு கூர இந்த நாட்டில் எவருக்கும் உரிமை இல்லை.

விக்னேஸ்வரனும், சிவாஜிலிங்கமும் புலிகளின் பாணியில் செயற்படுவதை நிறுத்த வேண்டும். நாட்டில் மீண்டும் இனவாதப் போரைத் தூண்டும் வகையில் அவர்கள் செயற்படுகின்றார்கள்.

சிவாஜிலிங்கம் கைதுசெய்யப்பட்டதை எவரும் கண்டிக்க முடியாது. நீதிமன்றத்தின் தடையுத்தரவை எவர் மீறினால் அவர்கள் கைதுசெய்யப்படுவார்கள். இதை அறிந்தும் திலீபனைச சிவாஜிலிங்கம் நினைவுகூர்ந்ததை எவ்வாறு நியாயப்படுத்த முடியும்?" என்றார். (எ*-22)

## பயங்கரவாதிகளை.........

டார்.

இவ்வாறு அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:
சிவாஜிலிங்கம் வடக்கில் கடந்த காலங்களிலும் நீதிமன்றங்களின் தடையுத்தரவுகளைமீறிஅடாவடிகளைப்புரிந்துள்ளார். சிவாஜிலிங்கம் தான் புலிகளின் உறுப்பினர் என்ற நினைப்புடன் செயற்பட்டு வருகின்றார். அவர் பயங்கரவாதிகளைவிட மோசமானவர். அவரை ஒருபோதும் திருத்தவே முடியாது. அவரைச் சிறையில் வைத்தால்தான் திருத்த முடியும்.

வடக்கில் சிவாஜிலிங்கம் மட்டுமல்ல விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் எனப் பல மோசமான அரசியல்வாதிகள் இருக்கின்றார்கள். இவர்களுக்கு நீதித்துறைதான் தண்டனை வழங்க வேண்டும் என்றார்கள். (ஓ,5,22)

## தடையை.......

சிவாஜிலிங்கம் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். அவரைக் கைதுசெய்த கோப்பாய் பொலிஸார் தடுப்புக் காவலில் வைத்துள்ளனர்.

தியாகி திலீபன் நினைவேந்தல் நேற்று ஆரம்பமான நிலையில், நினைவேந்தல்களை நடத்துவதற்கு நீதிமன்று ஊடாக பொலிஸார் தடை உத்தரவு பெற்றிருந்தனர். தியாகி திலீபனுக்கு நினைவேந்தல் நடத்தப்படக்கூடிய இடங்களில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

இந்தநிலையில், நேற்று முற்பகல் 10 மணியளவில் எம்.கே.சிவாஜிலிங்கம் உரும்பிராய் பகுதியில் தியாக தீபம் திலீபனுக்கு நினைவேந்தல் நடத்தி, அஞ்சலி செலுத்தினார். அதை அறிந்த கோப்பாய் பொலிஸார் அங்கு சென்று அவரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டு கோப்பாய் பொலிஸ் நிலையம் அழைத்துச் செல்லப்பட்ட எம்.கே.சிவாஜிலிங்கம் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவர் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)

## நல்லூரில்.......

ற்றப்பட்டுள்ளன.

தியாக தீபம் திலீபனின் 33ஆம் ஆண்டு நினைவேந்தல் வாரம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது. நினைவேந்தல் நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தநிலையில், யாழ்ப்பாணப் பொலிஸார், இரவோடு இரவாக நினைவிடத்தில் அமைக்கப்பட்டிருந்த உருவப்படம் மற்றும் நினைவேந்தல் பதாகைகளை அகற்றியுள்ளனர்.

அதேவேளை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்ட தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் இடத்தையும் கோப்பாய் பொலிஸார் அகற்றியுள்ளனர்.

தியாகதீபம் திலீபன் 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் 15ஆம் திகதி ஐந்து கோரிக்கைளை முன்வைத்து உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார். கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை தண்ணீர் அருந்தப்போவதில்லை என்றும் அறிவித்தார். அந்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததால், அவர் உணவு தவிர்ப்பில் ஈடுபட்ட பனிரெண்டாம் நாளான செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி உயிரிழந்தார். (ம-26)

## மன்னிப்புக்கோர......

ஏற்றுக்கொள்வதற்கு முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தரப்புச் சட்டத்தரணி கனகஈஸ்வரன் மறுப்புத் தெரிவித்தார். அதையடுத்து வழக்கு விசாரணைகள் நேற்று ஆரம்பமாகின.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி கனகஈஸ்வரன், வழக்கை சமரசமாக முடித்துக் கொள்வது தொடர்பில் மனுதாரர் டெனீஸ்வரன் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்துள்ளார். சமரசமாக முடித்துக் கொள்வது பற்றிப் பேசவுள்ளோம் என்று மன்றில் தெரிவித்துள்ளார். இதற்கு டெனீஸ்வரன் தரப்புச் சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ மூன்று விடயங்களை குறிப்பிட்டுள்ளார்.

டெனீஸ்வரன் தாக்கல் செய்த வழக்கில் இடைக்காலக் கட்டளை வழங்கப்பட்டதும் அதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் விக்னேஸ்வரன் மேன்முறையீடு செய்திருந்தார். அந்த வழக்கை மீளப் பெறவேண்டும்.

நீதிமன்றம் வழங்கிய இடைக்காலக் கட்டளையைச் செயற்படுத்தத் தவறியமைக்காக நீதிமன்றத்தில் மனவருத்தத்தை தெரிவிப்பதுடன், அமைச்சுப் பதவியிலிருந்து டெனீஸ்வரனை நீக்கியமைக்கமை பிழை என்று மன்னிப்புக் கோரவேண்டும்.

வழக்குச் செலவை ஏற்றுக் கொள்ள வேண்டும்என்றமூன்றுநிபந்தனைகளை முன்வைத்தார். இதற்கு விக்னேஸ்வரன் தரப்புச் சட்டத்தரணி, வழக்கை மீளப் பெறுவது மற்றும் வழக்குச் செலவு விடயங்களை ஏற்கலாம் என்று கூறியதுடன் விக்னேஸ்வரன் மன்னிப்புக் கோர மாட்டார் என்றும் விசாரணைகளை முன்னெடுக்கலாம் என்றும் குறிப்பிட்டார்.

அதையடுத்து விசாரணைகள் ஆரம்பமாகின. டெனீஸ்வரன் அமைச்சராக இருந்த காலத்தில் அவரது அமைச்சுக்கு செயலராக இருந்த எஸ்.சத்தியசீலன், வடக்கு மாகாண பிரதம செயலர் அ.பத்திநாதன் ஆகியோரிடம் சுமார் ஒன்றரை மணி நேரம் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு இன்றும் நாளையும் தொடரவுள்ளது.

**பின்னணி**

டெனீஸ்வரன் அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டமை தவறானது என்றும் அவரை மீள அமைச்சராக உள்வாங்குமாறும் மேன்முறையீட்டு நீதிமன்றம் 2018ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29ஆம் திகதி வழங்கிய இடைக்காலக் கட்டளையை செயற்படுத்த தவறிவிட்டார் என்று சட்டத்தரணி டெனீஸ்வரன் நீதிமன்ற அவமதிப்பு வழக்கொன்றை நீதியரசர் விக்கினேஸ்வரனுக்கு எதிராக தாக்கல் செய்திருந்தார்.

பிரதான வழக்கில் சட்டத்தரணி டெனீஸ்வரன் அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டமை தவறானது என்று வடமாகாண சபை கலைக்கப்பட்டதன் பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றம் 2019ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி தீர்ப்பளித்தது.

இடைக்காலக் கட்டளையை செயற்படுத்த நீதியரசர் விக்கினேஸ்வரன் தவறிவிட்டார் என்ற நீதிமன்ற அவமதிப்பு வழக்கே நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. (ஓ,5)

## ஆதிலிங்கேஸ்வரரின்.....

உற்சவம் எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள நிலையில் இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தொல்பொருள் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமையவே, நெடுங்கேணி பொலிஸார் இந்தத் தடையை விதித்துள்ளனர்.

இது தொடர்பாக ஆதிலிங்கேஸ்வரர் ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்ததாவது வருடாந்த உற்சவத்துக்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ள நிலையில், தொல்லியல் திணைக்களத்தால் நெடுங்கேணி பொலிஸாருக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. இன்று (நேற்று) மாலை எம்மை அழைத்து நெடுங்கேணி பொலிஸார் அந்தக் கடிதத்தைக் காண்பித்தனர். அது தனியே சிங்கள மொழியில் இருந்தது. எமக்கு அது புரியவில்லை.

தொல்லியல் சார்ந்த இடங்களைச் சிரமதானம் செய்ய முடியாது என்றும், அங்கு செல்வதையும், திருவிழா செய்வதையும் தடை செய்ய வேண்டும் என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். இது தொடர்பாக வழக்கு நீதிமன்றில் நடந்து கொண்டிருக்கின்றது. எம்மை ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொள்ள முடியும் என்றும், அபிவிருத்தி நடவடிக்கைகளைச் செய்யக் கூடாது என்றுமே நீதிமன்று அறிவுறுத்தியுள்ளது என்று தெரிவித்தோம். ஆனால் அதை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏற்றுக்கொள்ளவில்லை.

தொல்லியல் திணைக்களம் தெரிவித்தமைக்கு இணங்கவே செயற்பட முடியும் என்றும், நாளை (இன்று) நீதிமன்றம் வர வேண்டும் என்றும் தெரிவித்தார். என்றனர். (எ-110)

## விவசாய.....

பட வேண்டும். விவசாயிகள் யாரும் கழிவு அறவிடப்படுவதற்கு ஒத்துழைக்க வேண்டாம். கழிவு அறவிடும் வியாபாரிகளை உடனடியாகப் பொலிஸில் பிடித்துக் கொடுங்கள். இவ்வாறு விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அழுத்கமகே தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற விவசாய சங்கப் பிரதிநிதிகள், அதிகாரிகளுடனான கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'தமது உற்பத்திப் பொருள்களுக்கு சரியான விலை கிடைப்பதில்லை. இடைத்தரகர்கள் கொள்ளை இலாபம் பெற்றுக் கொள்கின்றனர். சந்தைகளுக்கு பொருள்களைக் கொண்டு சென்றால் 10 சதவீதம் கழிவு அறவிடப்படுகின்றது. 4 சதவீதம் வரி விதிக்கப்படுகின்றது' என்று விவசாயிகள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

இதன்போது அமைச்சர் மஹிந்தானந்த, வடக்கில் மாத்திரமே இவ்வாறான கழிவு நடைமுறை காணப்படுகின்றது. சந்தைகள் உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் இயங்குகின்றன. எனவே வடக்கு மாகாண ஆளுநர், உள்ளூராட்சி ஆணையாளர், யாழ்ப்பாண மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோர் இந்த விடயத்தில் கவனம் எடுக்க வேண்டும்.

இன்றிலிருந்து 10 சதவீதக் கழிவு அறவிடப்படக் கூடாது. அதனையும் மீறி யாராவது அறவிட்டால் உடனடியாக பொலிஸில் அவர்களைப் பிடித்துக் கொடுங்கள். இதேவேளை கொரோனா காரணமாக வெளிநாட்டுக்கு விவசாய உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்வது தடைப்பட்டுள்ளது. விரைவில் அது ஆரம்பமானதும், உங்களது பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படும், என்றார். (ஓ,5)

## கத்திக் குத்தால்......

யில் நடந்துள்ளது.

பருத்தித்துறை வியாபாரி மூலையைச் சேர்ந்த நடேசலிங்கம் (வயது49) என்பவரே கத்திக்குத்துக்கு இலக்காகி இறந்தவராவார். அவர் பருத்தித்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதிலும் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

கத்தியால் குத்தியவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம26,108)

## வேலையற்ற இளைஞர்கள் பிரிட்டனில் அதிகரிப்பு

லண்டன், செப்.16
பிரிட்டனில் வேலையில்லாத இளைஞர்களின் எண்ணிக்கை ஜூலை முதல் அடுத்த மூன்று மாதம் வரையான காலப் பகுதியில் 156,000 ஆக உயர்வடையவுள்ளது. 16 முதல் 24 வயதுக்குட்பட்டவர்களே இவ்வாறு வேலைவாய்ப்பினை இழக்க வாய்ப்புக்கள் உள்ளன என இங்கிலாந்தின் அண்மைய புள்ளி விபரத் தகவல்கள் வெளிப்படுத்தியுள்ளன. ஒட்டுமொத்தமாக, இங்கிலாந்தின் வேலையின்மை விகிதம் இந்த காலகட்டத்தில் 4.1 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது முன்பு 3.9 சதவீதமாக இருந்தது. (வ-இ)



## சசிகலா ஜனவரியில் விடுதலை

சென்னை, செப்.16
சொத்துக்குவிப்பு குற்றச்சாட்டில் பெங்களூர் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சசிகலா அடுத்த ஆண்டு ஜனவரி 27 ம் திகதி விடுதலையாகின்றார் என சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தகவல் அறியும் உரிமையைப் பயன்படுத்தி கேட்கப்பட்ட கேள்விக்கு சிறைச்சாலை நிர்வாகம் இந்தப்பதிலை வழங்கியுள்ளது. சசிகலா முன்கூட்டியே விடுதலையாக வாய்ப்பில்லை அவர் பத்துகோடி அபராதத்தை கட்டியேயாக வேண்டும். அதனைக் கட்டத்தவறினால் அவரது விடுதலை தள்ளிப்போகும் என சிறைச்சாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (வ-இ)



## மசூதியை இடிக்க நீதிமன்று உத்தரவு

ஜெருசலேம், செப்.16
ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு ஜெருசலேமில் உள்ள மசூதியொன்றை இடிப்பதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
கட்டுமான அனுமதி இல்லாத காரணத்தினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகிறது.
இஸ்ரேலின் இடிப்பு அறிவிப்புக்கு பதிலளிக்கும் விதமாக, காசாவில் உள்ள மானியம் மற்றும் மத விவகார அமைச்சகம் பாலஸ்தீனிய ஊடகங்கள் பரப்பப்பட்ட ஒரு அறிக்கையை வெளியிட்டதுடன் இந்த நடவடிக்கைக்கு எதிராக இஸ்ரேலையும் எச்சரித்துள்ளது.
ஜெருசலேமில் உள்ள முஸ்லிம் புனித தலங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்களை பாதுகாக்க சர்வதேச சமூகம், அரபு லீக் மற்றும் இஸ்லாமிய மாநாட்டின் அமைப்பு ஆகியவற்றுக்கும் பலஸ்தீனம் அழைப்பு விடுத்துள்ளது. (வ-இ)

# நவால்னியின் உடலில் விஷம்

### பிரான்ஸ், சுவீடன் உறுதிப்படுத்தின



பெர்லின், செப்.16
ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவால்னியின் உடலில் விஷம் கலக்கப்பட்டுள்ளமையை பிரான்ஸ் மற்றும் சுவீடன் அரசுகள் உறுதிப்படுத்தியுள்ளன.
இது தொடர்பில் ஜேர்மனி அரசு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
பிரான்ஸ் மற்றும் சுவீடன் நாடுகளில் உள்ள சோதனை நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸ் நவால்னிக்கு விஷம் வைக்கப்பட்டது உறுதி செய்யப்பட்டது. இருப்பினும், நாங்கள் சில முடிவுகளுக்காகக் காத்திருக்க வேண்டும்.
இந்த விவகாரத்தில் அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக நாங்கள் ஐரோப்பிய நாடுகளுடன் தொடர்பில் இருக்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
அலெக்ஸி நவால்னிக்கு விஷம் வைக்கப்பட்டதை ஜேர்மன் அரசு சமீபத்தில் உறுதிப்படுத்தியது.
மேலும், ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவால்னிக்கு புடின் விஷம் வைத்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பாக ரஷ்யா மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படுவது குறித்து ஆலோசிக்கப்படும் என்று ஜெர்மனி தெரிவித்தது.
விஷம் வைக்கப்பட்டது தொடர்பாக தங்களுக்கு ஆதாரம் கிடைத்துள்ளது என ஜெர்மனி தெரிவித்தது.
ஆனால், இந்தக் குற்றச்சாட்டை ரஷ்யா முற்றிலுமாக மறுத்தது.
இந்த நிலையில் அலெக்ஸி நவால்னியிடம் விசாரணை நடத்த ரஷ்யா முயன்று வருகிறது. (வ-இ)



### ஜப்பான் ஆளும் கட்சியின்

## புதிய தலைவராக யொசிஹிடே சுகா

டோக்கியோ, செப்.16
ஜப்பானின் ஆளும் கட்சியின் புதிய தலைவராக யொசிஹிடே சுகா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இதையடுத்து அந்நாட்டின் அடுத்த பிரதமராக அவர் வரவுள்ளார். உடல் நிலையைக் காரணம் காட்டி ஜப்பான் பிரதமர் அபே கடந்த மாதம் தனது இராஜினாமாவை அறிவித்தார். அபேவின் நெருங்கிய கூட்டாளியான சுகா, அரசில் தொடர்ந்து அபேவின் கொள்கையைப் பின்பற்றுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பழைமைவாத மிதவாத ஜனநாயகக் கட்சித் தலைமை பதவிக்காக நேற்று இடம்பெற்ற வாக்கெடுப்பில் 534 வாக்குகளில் 377 வாக்குகளை சுகா பெற்றார்.
ஆளும் கட்சி தனது புதிய தலைவரைத் தேர்வு செய்திருக்கும் நிலையில் புதிய பிரதமரை தேர்வு செய்வதற்கு வரும் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது. நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சி பெரும்பான்மையைப் பெற்றிருக்கும் நிலையில் யொசிஹிடே சுகா புதிய பிரதமராகத்தேர்வு செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (வ-இ)

## 6 பேருக்கு மேல் ஆபத்து

லண்டன், செப்.16
கொரோனாப் பரவல் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியதையடுத்து பிரிட்டனில் பொதுவெளியில் ஆறு பேருக்கு மேல் ஒன்று கூடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் பிரிட்டன் அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், "கொரோனாப் பரவல் மீண்டும் அதிகரித்து வருகிறது. தொடர்ந்து மூன்றாவது நாளாக 3,000 பேர் வரை கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
எனவே, கொரோனாவைக் கட்டுப்படுத்த பொதுவெளியில் 6 பேருக்கு மேல் கூடத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. மீறினால் அபராதம் விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

### கொரோனா 2ஆம் அலை;

## மீண்டும் இஸ்ரேல் முடக்கம்

ஜெருசலேம், செப்.16
இஸ்ரேலில் கொரோனா தொற்றின் இரண்டாம் அலை காரணமாக மீண்டும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் 3 வாரங்களுக்கு முடக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது. நாளாந்தம் சுமார் 4,000 பேர் புதிதாக கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்படுகின்றார் எனவும் இதனால் முடக்கம் அறிவிக்கப்படவுள்ளது எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது. இஸ்ரேலில் இதுவரை 153,000 இற்கும் மேற்பட்டோர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். (வ-இ)



வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

சகல நாடுகளுக்கான துரித தபால்கள். பொதிகள் சேவை எம் ஊடாக நடைபெறுகின்றன. மிக குறைந்த கட்டணத்தில் வடமாகாணத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட முகவர்

திருமுருகன் கொம்நெற் (Pvt) Ltd

321, K.K.S வீதி, யாழ்ப்பாணம். 0777554528, 0212227835

ALLIANCE FRANCAISE DE JAFFNA

af பிரெஞ்சு மொழி

- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna

# ஐ.பி.எல்லில் அமெரிக்க வீரர்

டுபாய், செப்.16

ஐ.பி.எல். வரலாற்றிலேயே முதல் முறையாக அமெரிக்காவைச் சேர்ந்த வீரர் ஒருவர் 13 ஆவது ஐ.பி.எல். போட்டியில் விளையாடவுள்ளார்.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள அந்த வீரரின் பெயர் முகமது ஹசன் அலி கான்(வயது29). வேகப்பந்து வீச்சாளரான அவர் இங்கிலாந்தைச் சேர்ந்த கேரிகுர்னேவுக்கு பதிலாக சேர்க்கப்படவுள்ளார். ஐ.பி.எல். அனுமதிக்காக கொல்கத்தா அணி காத்திருக்கிறது. ஐ.பி.எல். நிர்வாகம் அலிகானுக்கு அனுமதி அளித்தால், ஐ.பி.எல்.லில் விளையாடவுள்ள முதல் அமெரிக்க வீரர் என்ற பெருமையை அவர் பெறுவார்.

அலிகான் இந்த சீசனில் கரீபியன் லீக் ரி20 தொடரில் போலார்ட் கப்டனாக இருந்த ரிரின்பாகோ நைட் ரைடர்ஸ் அணியில் ஆடினார். இந்தத் தொடரில் அவர் 8 இலக்குகளை வீழ்த்தியிருந்தார். யோர்க்கர் பந்து வீசுவதில் தேர்ச்சி பெற்றவராவார்.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி தொடக்க ஆட்டத்தில், 23 ஆம் திகதி மும்பையைச் சந்திக்கிறது.

கடந்த ஐ.பி.எல். தொடரின் போதே கொல்கத்தா அணி நிர்வாகம் அலிகானை எடுக்க முயன்று முடியவில்லை. அப்போது அவர் கனடா ரி20 போட்டிகளில் சிறப்பாக பந்து வீசி அனைவரின் கவனத்தையும் ஈர்த்தார். (ற)

## ரென்னிஸ் தரவரிசையில்
# மூன்றாவது இடத்தை பிடித்தார் ஒசாகா

நியூயோர்க், செப்.16

உலக ரென்னிஸ் தரவரிசையில் அமெரிக்க பகிரங்க பட்டத்தை வென்ற ஜப்பான் வீராங்கனை நவோமி ஒசாகா, 6 இடங்கள் முன்னேறி 3 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் போட்டி முடிவைத் தொடர்ந்து, புதிய தரவரிசைப் பட்டியலை சர்வதேச ரென்னிஸ் சங்கம் நேற்று வெளியிட்டது.



இதன்படி ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ஜோகோவிச் (சேர்பியா) தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார். பெண்கள் ஒற்றையர் பிரிவில் ஆஷ்லி பார்ட்டி (ஆஸ்திரேலியா) முதன்நிலை இடத்திலும், சிமோனா ஹாலெப் (ருமேனியா) 2 ஆவது இடத்திலும் தொடருகின்றனர். நவோமி ஒசாகா 6 இடங்கள் முன்னேறி 3 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். (ற)

## தாச்சிப் போட்டிகள்
## ஞாயிறன்று ஆரம்பம்

சாவகச்சேரி, செப்.16

யாழ்ப்பாண மாவட்ட தாச்சிச் சங்கத்தின் ஏற்பாட்டில், இந்த வருடத்துக்கான மாவட்ட நிலை தாச்சிப் போட்டிகள் எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன. இந்தப் போட்டிகள் கைதடி குமரநகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன. தினமும் இரு போட்டிகள் என்ற அடிப்படையில், மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 8.30 மணி வரை போட்டிகள் நடத்தப்படவுள்ளன. (ற-9)

Techno World
தொழில்நுட்பக் கல்லூரி
A/L தொழில்நுட்பபிரிவு
இறுதிச் செயலமர்வு

ICT — September - 18 - 21, 8.00am - 2.30pm
ஆசிரியர்கள் - லவன், உமாகாந்தன்

விவசாய விஞ்ஞானம் — September - 18 - 21, 8.00am - 2.30pm
ஆசிரியர்கள் - நிறோஜன், ஜெயந்தன் , சாரங்கன், குமரன்

கணிதம் (7) — September - 18 - 21, 8.00am - 2.30pm
ஆசிரியர் - ஹரிகரன்

புவியியல் — September - 18 - 21, 8.00am - 2.30pm
ஆசிரியர் - S.P. கரன்

077 017 5346, 077 170 3549
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்

வேலைவாய்ப்பு



யாழில் இயங்கிவரும் அச்சகத்தில் பின்வரும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

- ★ வரவேற்பாளர்
- ★ சந்தை படுத்தல் உத்தியோகத்தர்
- ★ எழுதுவினைஞர்

தகுதியானவர்கள் இன்று (16.09.2020) புதன்கிழமை முற்பகல் 9.30-12.00 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம்தரவும்.

ES பிரிண்டர்ஸ்
இல.357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

விற்பனைக்கு - நாய்க்குட்டிகள் - மானிப்பாயில்
7 வாரங்கள் நிரம்பிய அல்ஷேசன் கலப்பு பெண் குட்டிகள் - பூச்சி நீக்கப் பட்டு பாவோ ஊசி ஏற்றப்பட்டவை ஒன்றரை வயது நிரம்பிய அல்ஷேசன் பெண் நாயும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 451 8990

BARATHY
சித்தன்கேணி
மாபெரும் கருத்தரங்கு
A/L 2020
தமிழ்
யாழ் மாவட்டத்தின் முன்னணி தமிழ்ப் பேராசான்
திரு. ந. சத்தியவேந்தன்
B.A (Hons) spl in Tamil
M.phill (Tamil)
40 மணித்தியாலம் முதலாவது கருத்தரங்கு
ஆரம்பம்.18.09.2020
வெள்ளி 8.00 am

- வெளி மாணவர்களும் பங்கு பற்றலாம்.
- பெயர்ப்பதிவுகளையும், கட்டணங்களினையும் முற்கூட்டியே மேற்கொள்ளவும்.

Note
ஆசிரியரின் வகுப்பு A/L 2022, 2021 பிரிவுகளும் நடைபெறுகின்றன. உங்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு: 077 376 3511